விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 27 திங்கட்கிழமை (12.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 236

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# பள்ளிவாசல் தாக்குதல் அமெரிக்கா கண்டனம்


## மீண்டும் ஊரடங்கு உத்தரவு

(கொழும்பு)

தலைநகர் கொழும்பின் கிராண்ட்பாஸ் பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றை நேற்று முன்தினம் பௌத்த கும்பல் ஒன்று தாக்கியதை அடுத்து அப்பகுதியில் மதக் கலவரம் வெடித்திருந்த நிலையில் அப்பகுதியில் நூற்றுக்கணக்கான பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை போடப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு காலை விலக்கிக்கொள்ளப்பட்டது. தற்போது மீண்டும் இன்று காலை 7 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது மேலும் நீடிக்கப்படலாம் எனவும் கருதப்படுகிறது. (19ஆம் பக்கம் பார்க்க)





இருபத்து மூன்று வருடங்களிற்குப் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு இரண்டு புகையிரதங்கள் வருகை தந்துள்ளன. யுத்தம் காரணமாக 1990ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் கிளிநொச்சிக்கான புகையிரதச் சேவை துண்டிக்கப்பட்டது. இந்த நிலையில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் புகையிரதப்பாதை புனரமைப்புச் செய்யப்பட்டு நேற்றையதினம் இரண்டு புகையிரதங்கள் கிளிநொச்சியை வந்தடைந்தன.

## தமிழர்களின் காணி உரிமையை மறுக்கும் சிங்கள மக்கள்

### கொக்குத்தொடுவாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்வதற்காக சென்ற தமிழ் மக்களினை விவசாயம் செய்ய விடாது சிங்கள மக்கள் துரத்தியுள்ளனர்.

இவ் அவலச்சம்பவம் நேற்று முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

2012 ஆம் ஆண்டு ஆரம்ப காலப்பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட கொக்குத்தொடுவாய் மக்கள் கடந்த வருடம் முழுவதும் தொழில் இன்றி கஷ்டங்களினை எதிர்நோக்கி வந்துள்ளனர்.

27 வருடங்களின் பின்னர் மீள்குடியேற்றப்பட்ட இவ் மக்கள் மீள் (20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. காலை 8.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று பின்னர் முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றம் இடம்பெறவுள்ளது.



தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ள நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்திற்கு யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிமாவட்டங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல இலட்சக் கணக்கான பக்தர்கள் வருகை தரவுள்ளார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது. (செ-6)

## மாணவனைக் காணவில்லை!

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிலையத்திற்கு சென்ற மாணவனை காணவில்லையென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் கரணவாய் விழுந்தாலடியினைச் சேர்ந்த கருணாநிதி நிலக்ஷன் (வயது 13) என்ற மாணவனே காணாமல் போயுள்ளார்.

குறித்த மாணவன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வருவதாகவும் நேற்று முன்தினம் 12.30 மணிக்கு நவிண்டில் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு சென்றவர் வீடு திரும்பவில்லை என தெரிவிக்கப் படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் மாணவனின் பெற்றோரால் முறையிடப் பட்டுள்ளது. (செ-4,74)

## நாவற்குழி விகாரைக்கு பொலிஸ் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவற்குழிப் பகுதியில் விகாரை மீது நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு தாக்குதலையடுத்து அப் பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இருப்பினும் இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக நேற்று மாலை வரை எவரும் கைது செய்யப்பட வில்லை என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

தென்மராட்சி (சாவகச்சேரி) பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப்பகுதியில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களால் அமைக்கப்பட்ட விகாரை மீதே இந்த கைக்குண்டு தாக்குதல் இனம் தெரியாத நபர்களினால் நேற்றுமுன் தினம் (19ஆம் பக்கம் பார்க்க)

# அரசு வெற்றி பெற்றால்தான் வலி.வடக்கில் மீள்குடியேற்றமா?

## ஊடகங்கள் - வேட்பாளர்கள் வாக்குவாதம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் தேர்தலில் வெற்றி பெற்றால்தான் வலி.வடக்கில் மீள் குடியேற்றம் இடம்பெறும் என்றால் தேர்தல் வெற்றிக்காகவா மக்களின் காணிகள் இராணுவத்தினரால் இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளது என ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வியால் கடும் [illegible] ஏற்பட்டது.

யாழ்.கிறீன்கிறாஸ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்ற மேற்படி பத்திரிகையாளர் சந்திப்பில் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களான முடியப்பு றெமிடியஸ், நடராஜா தமிழகன் (லங்கா சமசமாஜக் கட்சி), அகிலதாஸ், குமார் சர்வானந்த், திருமதி கீதாஞ்சலி, [illegible] ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக கூற முடியாது எனவும் காரணம் முழுமையான வாக்கினையும் அவர்கள் பெறவில்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ் மக்களுக்கு எதிராக பல இனக் கலவரங்கள் வெடித்ததாகவும் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாகவும் சரமாரியாக குற்றச்சாட்டை முன்வைத்த வேட்பாளர்கள் ஒரு கட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது வாயினை. மூடிக்கொண்டு இருந்தால் இரண்டு வருடங்களில் சிறையிலுள்ள அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டு விடுவார்கள். உயர்பாதுகாப்பு வலயத்திலும் மீள்குடியேற்றம் இடம் பெறும் எனவும் தெரிவித்தனர்.

இதுதவிர, வடக்கு மாகாண சபைத் தேர்தலை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றினால் உயர் பாது (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணி, பொலிஸ் அதிகாரங்களினால் தமிழர்கள் பிரிந்து போகக் கூடும்

## சிங்கள மக்களின் அச்சம் இதுவே – விக்னேஸ்வரன்

(கொழும்பு)

மாகாணசபைகளை நிறுவி பொலிஸ், காணி அதிகாரங்களை பிரயோகித்து, தமிழ் மக்கள் பிரிந்து சென்று விடுவார்கள். இவ்வாறு பிரிந்து போக தமிழ் மக்களுக்கு இந்தியா உதவி செய்யும் என்று அச்சமும் சிங்கள மக்கள் மத்தியில் வலுப்பெற்றுள்ளது. இதனாலேயே சீனாவை அரசாங்கம் நாடியிருக்கிறது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கான தேர்தல் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தலைமையில் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பில் மேலும் அவர் உரையாற்றுகையில்,

இரண்டு நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்படும் ஒப்பந்தமானது தனியொரு நாட்டினால் மட்டும் வலுவற்றதாக மாற்ற முடியாது. பன்னாட்டு ஒப்பந்தங்கள் சார்பான லியன்னா மாநாட்டு முடிவுகள் இதனை வலியுறுத்துகின்றன. அவ்வாறு ஒரு பன்னாட்டு ஒப்பந்தம் வழக்கொழியச் செய்யப்பட வேண்டுமானால் அது தொடர்பில் சம்மந்தப்பட்ட தரப்பாரின் கலந்தாலோசனையின் பின்னே அது மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாகாணசபை சட்டத்திற்கு மேலதிகமாக அதிகாரப் பரவலாக்கலை மேலும் விரிவடையச் செய்ய 1994ஆம் ஆண்டு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் எதிர்தரப்பினரால் அது எதிர்க்கப்பட்டது. அத்துடன் எமது இளைஞர்களிடையே நாட்டைப் பிரித்தல் என்ற குறிக்கோளும் இருந்த நிலையில் மேற்படி முன்னேற்றங்கள் எவையும் கருத்தில் எடுக்கப்படவில்லை.

மாகாணசபைகளை நிறுவி பொலிஸ், காணி அதிகாரங்களை பிரயோகித்து தமிழ் மக்கள் பிரிந்து சென்று விடுவார்கள் என்ற அச்சம் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து வருகின்றது. இவ்வாறு பிரிந்துபோக தமிழ் மக்களுக்கு இந்தியா உதவி செய்யும் என்ற எண்ணமும் வலுப்பெற்றுள்ளது. இதனாலேயே சீனாவை அரசாங்கம் நாடியிருக்கின்றது. ஆனால் இவை தொடர்பான சட்டம் அவ்வாறான தனிப்பட்ட பொலிஸ் படையினை உருவாக்கி அதனூடாக தனிநாடு ஒன்றினை ஏற்படுத்த இடமளிக்கக் கூடும் என்பது பொய்.


ஏனெனில் அரசாங்கம் முதலில் பொலிஸ் ஆணைக்குழுவை நியமிக்கவேண்டும். அதன் பின்னர் இலங்கையின் பொலிஸ்மா அதிபர் மாகாண பொலிஸாரின் தலைவராக பிரதி பொலிஸ்மா அதிபரை நியமிக்க வேண்டும். எனவே மாகாணசபை பொலிஸ் படையினை அமைப்பது மத்திய அரசாங்கத்தின் அனுசரணையுடனேயே என்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம். மாகாண பொலிஸ் படை தான்தோன்றித்தனமாக நடந்துவிடக் கூடும் என்ற சந்தேகமும் பயமும் தேவையற்றவை.

வரதராஜப் பெருமாள் காலம் வேறு; இன்றிருக்கும் காலம் வேறு. இந்திய சர்வதேச சமாதானப் படை இங்கு நிலைகொண்டிருந்தது. ஆனால் . இன்று அவ்வாறான நிலையில்லை. நாங்கள் சகல பாதுகாப்புக்களையும் இழந்த நிலையில் இருக்கின்றோம். எமது பாதுகாப்பை கருத்தில் கொண்டே மேற்படி பொலிஸ் அதிகாரம் மாகாணசபை சட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டது.

13-ஆம் திருத்தச் சட்டத்தை நாம் பரிசீலித்துப் பார்க்கும் போது, மத்திய அரசாங்கத்தின் கையே மேலோங்கியுள்ளது இங்கே சமஷ்டி கருத்துக்களுக்கு இடமில்லை. தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தம்மை தாமே ஆளும் நிலை என்பது வெகுதூரத்தில் இருக்கிறது என்பதை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டாக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-4,6)

# முன்னாள் இராணுவத் தளபதி டெனிஸ் பெரேரா காலமானார்!

(கொழும்பு)



முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் டெனிஸ் பெரேரா தனது 83-ஆவது வயதில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை காலமானார். 1977-ஆம் ஆண்டு முதல் 1981-ஆம் ஆண்டு வரை இலங்கையின் 8-ஆவது இராணுவ தளபதியாக இவர் கடமையாற்றினார். இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக இவர் நியமிக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் நியூசிலாந்து, பப்புவா நியூகினியா மற்றும் ஃபிஜி ஆகிய நாடுகளுக்காக இலங்கையின் உயர்ஸ்தானிகராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# பள்ளிவாசல்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதல்

## கவலையில் ஹக்கீம்

(கொழும்பு)

பள்ளிவாசல்கள் தாக்கப்படும் சம்பவங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை கவலையளிப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை அமைச்சர் ரவூப் ஹக்கீமின் ஊடகச் செயலாளர் டாக்டர் ஏ. ஆர். ஏ. ஹபீஸ் தெரிவித்தார்.

கிராண்ட்பாஸ் சம்பவம் இடம்பெற்ற போது ஹக்கீம் கண்டியில் தேர்தல் பிரசாரத்தில் இருந்தார். சம்பவத்தை கேள்வியுற்றபின் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை அழைத்து நிலைமைகளை கேட்டறிந்து கொண்டார்.

பின்னர் பொலிஸ் மா அதிபர் என். கே. இலங்ககோனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கிராண்ட்பாஸ் பகுதி பள்ளிக்கு மாத்திரமல்லாது அதனை சூழவுள்ள வீடுகளுக்கும் பாதுகாப்பு அளிக்குமாறு கோரினார்.

அதனை ஏற்றுக் கொண்ட பொலிஸ் மா அதிபர், இச்சம்பவம் குறித்து சமாதான கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்படும் என அமைச்சர் ஹக்கீமிடம் உறுதி அளித்துள்ளார்.

இதேவேளை பள்ளிவாசல்கள் மீது எத்தனையோ தாக்குதல்கள் நடத்தப்பட்டாலும் அரசை உறுதியாக விமர்சிக்காமல் அல்லது தீர்வு நடவடிக்கை எதுவும் உருப்படியாக எடுக்காமல் இலங்கையின் நீதி அமைச்சராக இன்னமும் அரசோடு இருந்து வருகிறார் ஹக்கீம் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

# மாதகல் பகுதியில் ஆசிரியர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இரவு வேளையில் விளையாட்டுத்துறை ஆசிரியரை வீட்டின் வெளியே அழைத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று இரவு 7.00 மணியளவில் மாதகல் பிரதான வீதி, செபஸ்தியார் ஆலயத்திற்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் மாதகல் சென் ஜோசப் மகா வித்தியாலயத்தில் விளையாட்டுத்துறை ஆசிரியராக கடமையாற்றும் ஜேசுதாசன் அனுஸ்டதாஸ் (35 வயது) என்பவரே காயமடைந்தவராவார்.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது 7 இளைஞர்கள் வந்ததாகவும் அதில் இருவர் குறித்த ஆசிரியரினை தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸ் முறைப்பாட்டில் இதேயிடத்தைச் சேர்ந்த இருவரது பெயர்கள் குறிப்பிடப்பட்டு உள்ளது.

காயமடைந்த ஆசிரியர் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் தகராறின் போது குறித்த ஆசிரியரின் தாயாரும் தாக்குதலுக்கு உள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)




ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளராகிய அங்கஜன் இராமநாதன் ஆகிய நான் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் இளைஞர் அணியின் யாழ் மாவட்டத்தின் தலைவராக உள்ளேன். எனவே யாழ் மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகள் அனைவரும் எமது இளைஞர் அணியில் இணைவதன் மூலமாக தமது வேலைவாய்ப்பு, சுயதொழில் உட்பட்ட அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யமுடியும். இம் மாவட்டத்தின் இளைஞர்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக்கும் பொறுப்பை கௌரவ ஜனாதிபதி அவர்கள் எம்மிடம் ஒப்படைத்துள்ளார். எனவே இளைஞர், யுவதிகள் அனைவரும் எமது கட்சி அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்வதன் மூலமாக எதிர்கால வாழ்வை சுபீட்சமாக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**அங்கஜன் இராமநாதன்**
யாழ் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்
பிரதான அமைப்பாளர்

(C-4293)

**காணி விற்பனைக்கு உண்டு**

வடமராட்சி வதிரிச் சந்திக்கு அருகாமையில்
5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
அத்துடன் சுற்றுமதில், மின்சாரம் என்பனவும் உண்டு.
இக் காணியை வாங்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல.
0776717393, 021 22 62 626

(C-4292)

**பிள்ளையார் இன்**

இன்று முதல் அதிவிசேட 25% விலைக் கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவை யுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

**இன்றைய விசேட உணவு:**

✔ தோசை (உருளைக் கிழங்கு கறியுடன்) ரூபா 80/-
✔ மசாலா தோசை (உருளைக் கிழங்கு கறியுடன்)
மசாலாபூரி சப்பாத்தி (உருளைக் கிழங்கு கறியுடன்)

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(சி-4099)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனமும் குரங்கும்

ஒரு தடவை பெர்னாட்ஷாவைப் பார்த்து, "உலகம் ஏன் உங்களை சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது?" என்று கேட்டார்களாம்.

அதற்கு அவர் சொன்னாராம்;

"ஒரு வருடத்தில் 2 அல்லது 3 தடவைக்கு மேல் யாருமே சிந்திப்பதில்லை. நான் வாரத்திற்கு ஒன்றிரண்டு தடவை சிந்திக்கிறேன். அதுதான் உலகம் என்னை சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது" என்று சொன்னாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

மனிதர்கள் யாருமே அதிகமாக சிந்திப்பதில்லை என்பது தெரிகிறது. மனம் சுத்தமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் சிந்தனை தெளிவாக இருக்கும்.

மனம் எந்தளவுக்கு சுத்தமாக இருக்க வேண்டும் தெரியுமா?

மார்க்ஸ் அரேலியஸ் என்ற அறிஞர் அதற்கு ஓர் அளவு கோல் கொடுத்திருக்கிறார். திடீரென்று உங்கள் முன் ஒருத்தர் வந்து நின்று, இப்ப நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அப்படியே சொல்லுங்கள் என்று கேட்டால், உடனே தயங்கமால் உள்ளது உள்ளபடியே...

"இதைத்தான் இப்பொழுது நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று சுலபமாக சொல்லக்கூடிய அளவுக்கு மனம் இருக்க வேண்டுமா? அதுதான் சுத்தமான மனம் என்கிறார் அவர்.

அப்படி சொல்லக்கூடிய நிலைமையிலேயா நாமெல்லாம் இப்பொழுது இருக்கிறோம்.

வெளிப்படையாகப் பேசுங்கள் சேர் என்று கேட்டால்...

"அது எப்படி சேர்? மனதில் நினைப்பதையெல்லாம் வெளியில் காட்டிக் கொள்ள முடிகிறதா?" என்றுதானே கேட்கிறோம். அதன்பின் எப்படி மனம் சுத்தமாகிறது?

நம்மில் பலர் மனதைக் கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும் என்றுதான் நினைக்கிறோம். ஆனால் அதுமுடிவதில்லை. மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மனம் ஒரு குரங்கு மாதிரி என்று சும்மாவா சொன்னார்கள்? மனதுக்கும் குரங்குக்கும் அப்படி என்ன ஒரு சம்பந்தம்?

இரண்டும் அடிக்கடி தாவிக் கொண்டிருக்கிறது. இதுதான் நமக்கு தெரிந்த ஒற்றுமை.

எனக்கு தெரிந்த நண்பர் ஒருத்தர் இதற்கு இன்னொரு விளக்கம் கொடுத்தார்.

"மனம், குரங்கு இவை இரண்டையும் எப்பொழுதும் கட்டுப்படுத்தியே வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் நமக்குத்தான் மிகவும் கஷ்டம்" என்றார்.

சில சமயம் குரங்கைவிட மோசமான மனதெல்லாம் கூட நம்மில் சிலரிடம் உண்டு.

திருக்குற்றாலத்தில் ஒரு தடவை ஒரு ஆள் கையில் வாழைப்பழத்தை வைத்துக் கொண்டு வேகமாக ஓடிக் கொண்டிருந்தான்.

பின்னால் ஒரு குரங்கு துரத்திக் கொண்டே ஓடி வந்தது. அதற்கு பின்னால் ஒருத்தர் அவர்கள் இருவரையும் துரத்திக் கொண்டு வெறுங்கையுடன் ஓடிக் கொண்டிருந்தார்.

வழியில் ஒருத்தர் இந்த ஆளை நிறுத்திக் கேட்டார்.

அந்த ஆள் தன் கையில் வாழைப்பழம் வைத்திருக்கிறான். அந்த குரங்கை பார்த்துவிட்டு ஓடுகிறான். அது நியாயம்.

குரங்கு அந்த வாழைப்பழத்தை பார்த்துவிட்டது. அதனால் அவனுக்கு பின்னால் ஓடுகிறது. அது நியாயம். நீ எந்த சம்பந்தமும் இல்லாமல் அவருக்குப் பின் ஓடுகிறாயே? இது என்ன நியாயம்? என்றார்.

"நான் ஓடுவது நியாயம் தான்" என்றார் இவர்.

"எப்படி" என்று கேட்டார் அவர்.

"அந்த ஆள் என் கடையில்தான் வாழைப்பழம் வாங்கினான். காசு கொடுக்காமல் ஓடுகிறான் சேர்" என்று சொல்லிவிட்டு துரத்த ஆரம்பித்தார் அவர்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தென்பகுதி மக்களுக்கான சுதந்திரம் வடபகுதி மக்களுக்கும் கிடைக்கவேண்டும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் வாழும் மக்களைப் போன்று வடபகுதி மக்களும் சகல உரிமைகளுடனும் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதைப் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக தெரிவித்த கடற்தொழில் மற்றும் நீரியல் வளத் துறைஅபிவிருத்திஅமைச்சர்வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன யுத்தத்திற்குப் பின்னரான கடந்த நான்கு வருடங்களில் மட்டும் யாழ். குடாநாட்டில் கடற்தொழில் துறையை அபிவிருத்தி செய்ய சுமார் மூவாயிரம் மில்லியன் ரூபா நிதியை தமது அமைச்சு ஒதுக்கீடுசெய்துள்ளதாகவும்தெரிவித்தார்.

யாழ். மாதகல் சேந்தான்குளம் பகுதியைச் சேர்ந்த கடற்தொழிலாளர்களுக்கு தொழில் உபகரணங்களை நேற்று முன்தினம் வழங்கி வைத்த பின் அமைச்சர் அங்கு உரையாற்றுகையில்,

யுத்தம் முடிந்த பின் யாழ். மாவட்டத்தில் கடற்தொழில்துறை மேம்பாட்டிற்காக எமது அமைச்சு சுமார் மூவாயிரம் மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ள அதேவேளை கடந்த இரண்டு, மூன்று வருடங்களில் மட்டும் பாரிய அபிவிருத்திப் பணிகளையும் கட்டுமானப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

வடக்கில் கடந்த 1983 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 45 சதவீதத்துக்கும் அதிகமாயிருந்த மீன்பிடித்தொழில் யுத்தம் காரணமாக பாரிய வீழ்ச்சியை அடைந்திருந்தது.

ஆனால்யுத்தம்முடிவுக்குகொண்டு வரப்பட்ட பின்பு கடற்தொழிலாளர்களுக்கு பல உதவிகளை வழங்கி மீண்டும் மீன்பிடித்துறையை அபிவிருத்தி அடையச் செய்து வருகின்றோம்.

குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் குருநாகர் பகுதியிலும் மன்னாரில் சிலாவத்துறையிலும் மீன்பிடித்துறை முகங்களை அமைக்கவும் பருத்தித் துறையில் துறைமுகமொன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு எதிர்வரும் 2015 அம் ஆண்டளவில் வடமாகாணத்தில் 11 மீன்பிடித்துறைமுகங்களை அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறான திட்டங்களின் ஊடாக வடமாகாணத்தில் கடற்தொழில் துறையை வளர்ச்சி காண வைக்க முடியும் என நாம் நம்புகின்றோம்.

மேலும் தென்பகுதியில் வாழும் மக்கள் எவ்வாறு சுதந்திரத்துடன் வாழ்கின்றனரோ அதேபோன்று வட பகுதியைச் சேர்ந்த மக்களும்சுதந்திரத்துடனும்சகல உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றோம்.

இங்குவாழும்மக்களின் சுதந்திரத்திற்கும் உரிமைகளுக்கும் பங்கம் ஏற்பட நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.

இதுதவிர தென்பகுதி மீனவர்கள் வடபகுதி கடற்பரப்பிற்குள் அத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதாக முறையிடப்பட்டதையடுத்து, அதனைத் தடுக்க நாம் நடவடிக்கை மேற்கொண்டு முற்றாக தடுத்துநிறுத்தியுமுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கடற்தொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் நிமால் ஹெட்டியராச்சி, யாழ். மாவட்ட கடற்தொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிறிமோகன் மற்றும் சேந்தான்குள மீனவர் சங்கப் பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

# 28 ஆவது குருபூசை

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் நடத்தப்படும் ஸ்ரீமத் முத்துக் குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 28 ஆவது குருபூசை நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் **ஆறுமுகமான பொருள்** எனும் தொனிப் பொருளிலான சொற்பொழிவை ஓய்வுநிலை ஆசிரியர் ஐ. சண்முகலிங்கம் வழங்கவுள்ளார்.

விசேட நிகழ்வாக சுவாமி அவர்களால் பாராயணம் செய்யப்பட்ட அருணாசல அட்சரணமாலை இறுவெட்டு வெளியீடும் இடம் பெறவுள்ளது.

இதன்போது ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளும் தொடர்ந்து ஆசிரமத்தில் அறுபத்துமூவர் குரு பூசையும் இடம்பெறவுள்ளது. (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 70 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 | 100 |
| தக்காளி | 40 | 40 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 60 | 70 | 120 | 100 |
| கரட் | 100 | 80 | 140 | 140 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 100-150 | 140-180 | 140 |
| பெரிய வெங்காயம் | 130 | 110 | 120 | 130 |
| பாகற்காய் | 60 | 40 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | — | 100 |
| பயற்றங்காய் | 50 | 60 | 80 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 60 | 140 |
| பீற்றூட் | 30 | 20 | 40 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 50 | 120 | 80 |
| போஞ்சி | — | 100 | 100 | 160 |
| கீரை - 1 பிடி | 40 | 15 | 30 | 30 |
| தேசிக்காய் | 220 | 180 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 45 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 | 120 |

# இராசி பலன்

12.08.2013
(ஆடி 27, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சஷ்டி பின்னிரவு 3.47 மணிவரை
சித்திரை பின்னிரவு 1.36 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
சஷ்டி விரதம், சித்தாமிர்தம்
நல்லைக் கந்தன் கொடியேற்றம்

**மேடம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறும், அதிர்ஷ்ட வாய்ப்புக்களை வரவழைத்துக் கொள்ள வேண்டிய நாள்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி தரும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மிதுனம்** நன்மைகள் நாடி வரும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், சான்றோர்களின் சந்திப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும், தொழில் நன்மையுண்டு.

**சிங்கம்** உறவு பகைபாராமல் உதவும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**கன்னி** பணத்தேவைகள் பூர்த்தியாகும், உடல் நலம் சீராகி உற்சாகம் அடைவீர்கள், சுய முயற்சிகள் மூலம் சுகம் காணவேண்டிய நாள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**துலாம்** திட்டமிட்ட காரியம் நடைபெறாவிட்டாலும் திட்டமிடாத காரியமொன்று நடைபெறலாம், உறவினர் தொடர்பான சில காரியங்களுக்காக அலைய நேரிடலாம், கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கந்தனை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், வாய்ப்புக்கள் தேடி வரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மகரம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திகரமானதாக இருக்கும், சான்றோர்களின் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், தூரத்துச் செய்தி நன்மை தரும்.

**கும்பம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மீனம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், உறவினர் வழியில் சுப செலவுகளைச் சந்திக்கலாம், உடல்நலனில் கவனம் தேவை, தொழில் ரீதியான பயணங்களால் கூடுதல் கவனம் தேவை.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிகள் மரபு முறையைத் தாண்டி பல்துறை வளர்ச்சிக்கும் உதவ வேண்டும்

## திசைகாட்டி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

விசா ஆலோசனை நிறுவனங்களுக்கு வங்கிகள் கதவடைப்பு செய்கின்றன என திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் நிறுவனத்தின் குழுமத் தலைவர் எஸ்.செல்வராஜ் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்திச் சந்தியில் அமைந்துள்ள திசைகாட்டி நிறுவனத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாடிக்கையாளருக்கு ஆரம்பத்தில் விசா நிச்சயமற்ற ஒன்று என்பதை எழுத்தில் போட்டு அறிவுறுத்திய பின்னரே அவர் வந்த விடயம் தொடர்பில் பிரஸ்தாபிக்கின்றோம்.


எம்மிடம் சமர்ப்பிக்கப்படும் விசா ஆலோசனை விண்ணபம் தொடர்பில் இறுதிவிடை கிடைக்கும் தினத்தை குறிப்பிட்டு பற்றுச்சீட்டு வழங்குகின்றோம். இதன் மூலம் எம்மவர்கள் மத்தியில் ஏற்படும் வழமையான மனக்குழப்பங்கள் சந்தேகங்கள் களையப்படுவதுடன் தொழில்முறையான கண்ணியம்பேணப்படுகின்றது.

இவை முன்மாதிரியான முன்னேற்பாடுகளாகும். இவற்றின் மூலம் இந்த விசா ஆலோசனைத் துறையை ஒரு தொழில் முயற்சியாக இதற்கும் ஆழமாக்கல், அகலமாக்கல் வளர்ச்சி என்பன உண்டு என்பதையும் அத்தோடு இத்தொழில் ஸ்திரத்தன்மை வாய்ந்ததென்பதையும் நிரூபித்து நிற்கின்றோம்.

ஆரம்ப கால கட்டங்களில் சில வங்கிகளின் உதவிகளை நாடிய போது உங்கள் தொழில் ஆலோசனைத் துறை, அதற்கு வங்கி மேலதிகப் பற்றோ அன்றேல் கடனே அவசியமில்லைத்தானே எனவும் கூறியிருந்தனர்.

இந்தத் தொழிலை வியாபாரத்தை இவ்வாறு வளப்படுத்த இந்த வங்கிகள் எந்த வகையிலும் உதவி தரவில்லை.

மரபு ரீதியான கொள்வனவு கொள்முதலே இந்த உள்ளூர் வங்கியாளர்கள் அறிந்த வணிகமும மேம்படுத்தலும். தங்கள் மன நிலையை அவர்கள் மாற்றி பல் துறை வளர்ச்சிக்கு யாழ்.வங்கிகள் தோள் கொடுக்க வேண்டும் என இவ்விடத்தில் பகிரங்கமாகவே வேண்டி நிற்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)




# 40 பிரபல ஹோட்டல்கள் முன்கூட்டியே பதிவு

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு இலங்கையிலுள்ள 40 பிரபல ஹோட்டல்கள் முன் கூட்டியே பதிவு செய்யப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகத்தின் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான பேச்சாளர் அநுராதா ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை வரவுள்ள சர்வதேச பிரதிநிதிகளைத் தங்க வைப்பதற்காக நீர்கொழும்பு முதல் களுத்துறை வரையுள்ள சகல வசதிகளுடனும் கூடிய ஹோட்டல்களின் அனைத்து அறைகளும் முன் கூட்டியே பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, பொதுநலவாய உச்சி மாநாட்டையொட்டி நவம்பர் 12 முதல் 14-ம் திகதி வரை 3 நாட்களுக்கு கொழும்பு சினமன்ட் கிரேண்ட் ஹோட்டலில் நடைபெறவுள்ள வர்த்தகப் பேரவையில் கலந்து கொள்வோருக்கென அதே ஹோட்டலின் 800 அறைகளும் குறித்த 3 தினங்களுக்கும் முன் கூட்டியே பதிவு செய்யப்பட்டிருப்பதாக முதலீட்டு ஊக்குவிப்புச் சபை தெரிவித்தது.

பொது நலவாய அமைப்பின் உறுப்புரிமை வகிக்கும் 53 நாடுகளினதும் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ள நிலையில், வர்த்தகப் பேரவையில் பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்காத நாடுகளைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிங்கப்பூரில் கருத்தரங்கு

சிங்கப்பூர் முதலீட்டாளர்களை இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில், அண்மையில் சிங்கப்பூரில் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

சிங்கப்பூரில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயமும், சிங்கப்பூர் பல்வேறு வர்த்தக அமைப்புக்களும் இணைந்து இந்த கருத்தரங்கை ஒழுங்கு செய்தனர்.

இந்த கருத்தரங்கில் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கப்பூர் வர்த்தக சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை பிரதிநிதிகள், இந்த கருத்தரங்கை அடுத்து சிங்கப்பூர் வர்த்தகர்கள் பலரை தனித் தனியாகவும் இலங்கைப் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்

# HSBC தெரிவு




இலங்கையின் இணையத்தள வங்கிச் சேவைகளை வழங்கும் சிறந்த வங்கியாக HSBC தொடர்ந்தும் 8-வது ஆண்டாக குளோபல் ஃபினான்ஸ் சஞ்சிகையின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

HSBC வங்கியின் இணையத்தளமானது மிகவும் இலகுவான வகையிலும், விரைவாகவும் வாடிக்கையாளர்களுக்கு தகவல்களை திரட்டிக் கொள்ளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என HSBCயின் அட்டைகள், தயாரிப்பு கள் மற்றும் சேவைகள் பிரிவின் தலைமை அதிகாரி ஜேம்ஸ் ரிபர்ட் தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர் தொழிலாளர் பங்களிப்பு அதிகம்

இலங்கை பொருளாதாரத்தில் புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பு 8 வீதத்திற்கும் அதிகம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுமார் 1.8 மில்லியன் பணியாளர்கள் உலகளாவிய ரீதியில் பணியாற்றுவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டிற்கு அந்நியச் செலாவணியை அவர்கள் பாரிய அளவில் ஈட்டித் தருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# கடந்த வாரம் பங்குச் சந்தை

கடந்த வாரத்தின் முதல் நாளான திங்கட்கிழமை கொடுக்கல் வாங்கல்களின் போது ஆகக் குறைந்தளவு புரள்வு பெறுமதியாக (288 மில்லியன் ரூபா) பதிவாகியிருந்தது.

இதில் அக்சஸ் என்ஜினியரிங் (58 மில்லியன்), செவ்ரோன் லூப்ரிகன்ட்ஸ் (40மில்லியன்), சிலோன டொபாக்கோ (35மில்லியன்) போன்றன பங்களிப்பை வழங்கியிருந்தன. அதிகளவு வியாபாரமான பங்குகளாக லோஃவ்ஸ் காஸ், சணச டிவலப்மன்ட் பாங்க், நேஷன் லங்கா ஃபினான்ஸ் போன்றன காணப்பட்டன.

அடுத்த நாளான செவ்வாய்க் கிழமை பங்குப் பெறுமதிகள் உயர்வாக நிறைவடைந்திருந்தன. நெஸ்லே லங்கா, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் புக்கிட் தாரா போன்ற நிறுவனங்களின் பங்குகள் உயர்வான பெறுமதியை பதிவு செய்திருந்தன. சந்தை புரள்வு பெறுமதி 532 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. இதில் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் 164 மில்லியன், செவ்ரோன் லூப்ரிகன்ட்ஸ் 63 மில்லியன் மற்றும் நெஸ்லே 63 மில்லியன் ரூபா பங்களிப்பை வழங்கியிருந்தன.

புதன்கிழமை கொடுக்கல வாங்கல்கள் நேர் பெறுமதியை பதிவு செய்து நிறைவடைந்திருந்தன. சந்தை புரள்வு பெறுமதியாக 725 மில்லியன் ரூபா பதிவாகியிருந்தது. இதில் செவ்ரோன் லூப்ரிகன்ட்ஸ் 181 மில்லியன், டிஸ்ரிலரீஸ் 89 மில்லியன் மற்றும் லங்கா ஐஓசி 80 மில்லியன் ஆகிய பெறுமதிகளை பதிவு செய்திருந்தன.

வியாழக்கிழமை கொடுக்கல் வாங்கல்களின் போது சந்தை கலப்பு வெளிப்பாடுகளை பதிவு செய்திருந்தது. மொத்த சந்தை புரள்வு பெறுமதி 285 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. இதில் டிஸ்ரிலரீஸ் 42 மில்லியன் ரூபாவையும், லங்கா செரமிக் 36 மில்லியன் ரூபாவையும், டெக்ஸ் சர்ட் ஜேர்சி 22 மில்லியன் ரூபாவையும் பதிவு செய்திருந்தன. குறிப்பிடத்தக்க பங்கு கை மாற்றமாக டிஸ்ரிலரீஸ் நிறுவனத்தின் 0.2 மில்லியன் பங்குகள் கைமாறியிருந்தன.

கடந்தவார இறுதிப்பகுதியில் உள்நாட்டு சிறு முதலீட்டாளர்களின் அதிகளவு சந்தை ஈடுபாட்டின் காரணமாக பங்குச்சந்தையின் பிரதான சுட்டிகள் உயர்வடைந்த நிலையில் பதிவாகியிருந்தன.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவு பங்கு விற்பனையில் கடந்த வாரம் ஆர்வம் செலுத்தியதை அவதானிக்க முடிந்ததுடன், சிலோன் டுபாக்கோ, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், வட்டவளை பிளான்டேஷன், கொமர்ஷல் வங்கி, சம்பத் வங்கி, சன்சைன் ஹோல்டிங்ஸ், எயிட்கன் ஸ்பென்ஸ் போன்ற நிறுவனங்களின் பங்குகளின் கடந்தவாரம் பெருமளவு ஆதிக்கம் செலுத்தியிருந்தன.

கடந்த வியாழக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது,

அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 6,151.92 ஆகவும் S&P சிறிலங்கா 20 சுட்டி 3470.16 ஆகவும் அமைந்திருந்தன.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் மொரிசன்ஸ், நெஸ்லே, லேக் ஹவுஸ் பிரின்., ஹேனாஸ் ஃபோல்ஸ் மற்றும் ஏசிஎல் பிளாஸ்ரிக்ஸ் போன்றன முதல் ஐந்து சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாகப் பதிவாகியிருந்தன.

என்வி றிசோர்சஸ் (உரிமை) (0.70), பிசி பார்மா, சென்ரல் இன்டஸ்., என்வி றிசோர்சஸ் (உரிமை) (1.60) மற்றும் பிசிஎச் ஹோல்டிங்ஸ் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாகப் பதிவாகியிருந் தன.

# ரிசர்வ் வங்கி ஆளுநராக ரகுராம் ராஜன் நியமனம்



இந்திய மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகராக உள்ள ரகுராம் ராஜன், ரிசர்வ் வங்கியின் புதிய கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார்.

3ஆண்டுகள், இவர் இப்பதவி வகிப்பார் என மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, ரிசர்வ் வங்கியின் கவர்னராக உள்ள டீ.சுப்பாராவ் எதிர்வரும் செப்டம்பர் 4-ம் தேதி ஓய்வுபெறுகிறார். இதையடுத்து ரகுராம் ராஜன் பொறுப்பேற்பார்.

சர்வதேச நிதியத்தின் முன்னாள் தலைமைப் பொருளாதார நிபுணரான ரகுராம் ராஜன், கடந்த ஆண்டு இந்திய மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாய் மதிப்பின் வரலாறு காணாத வீழ்ச்சி, குறைக்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ள நாட்டின் நடப்பு கணக்கு பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு இடையே ரிசர்வ் வங்கியின் கவர்னராக ரகுராம் ராஜன் பொறுப்பேற்கவுள்ளார்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.99 | 133.19 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 200.83 | 206.71 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 172.43 | 178.20 |
| சுவிஸ் பிராங் | 139.91 | 145.33 |
| கனேடிய டொலர் | 123.92 | 128.42 |
| அவுஸ்திரேலிய டொலர் | 116.31 | 120.85 |
| சிங்கப்பூர் டொலர் | 102.02 | 105.59 |
| ஜப்பான் யென் | 1.33 | 1.38 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.15 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.82 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எருமை மாடு 41,000 அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை



இந்தியாவின் வட மாநிலத்தில் எருமை மாடு ஒன்று 41 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கால்நடைகள் கண்காட்சியில் அதிகளவு பாலை கொடுத்த தன் மூலம் முதற்பரிசை வெற்றிக் கொண்ட **லக்ஷ்மி** எனும் எருமை மாடே இந்திய விலைப்படி 25 இலட்சம் ரூபாவிற்கு விலை போனது.

அத்துடன் இந்த எருமை மாடு தினந்தோறும் 28 லீற்றர் பால் கொடுத்து பல பரிசுகளையும் வென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிந்தியாவில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவரே இந்த எருமை மாட்டைக் கொள்வனவு செய்துள்ளார். (அ-2)

# கொரிய மொழித் தேர்ச்சி பரீட்சை அடுத்த மாதத்தில்

(கொழும்பு)

கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் தோற்ற எண்ணியுள்ளவர்களுக்கு நாளை திங்கட்கிழமை தொடக்கம் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் அமைக்கப் பட்டுள்ள 22 நிலையங்களில் எதிர் வரும் 15 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் விநியோகிக்கப் படவுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

ஏமாற்று பேர் வழிகளிடம் அகப்படுவதைத் தவிர்ப்பதற்காக பணியகத்தின் ஆலோசனைகள் தொடர்பில் மட்டும் அக்கறை கொள்ளுமாறும் பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சை அடுத்த மாதம் நடைபெறவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய கூறியுள்ளார். (அ-2)


நம்பிக்கையீனமா? மனத் தளர்வா?

## தற்கொலை எண்ணமா?

உங்களுக்கு யாருமே இல்லை என்ற வெறுமையா?
வாழ்க்கையில் வெறுப்பா?
உங்களுக்குக் கைகொடுக்க நாங்கள் காத்திருக்கின்றோம்.

உங்களை விளங்கிக் கொள்ளவும் உங்களை உள்ளவாறே ஏற்றுக்கொள்ளவும் எம்மால் முடியும். உங்களை நாம் ஆதரவுடன் செவிமடுப்போம். உடனே அழையுங்கள் அல்லது நேரில் வாருங்கள்.
(காலை 9 மணி முதல் மதியம் 01 மணிவரை)

(3558)

**கை கொடுக்கும் நண்பர்கள் :** (Srilanka Sumithrayo)
**தொலைபேசி: 021 222 8117**
(உங்கள் இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்)


# வாக்குச்சீட்டு அச்சிடும் பணி தொடங்கியது

மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளன.

வடக்கு, மத்திய, வடமேல் மாகாண சபைகளுக்கு நடைபெறவுள்ள தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்கள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு வருகின்றன.

வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணியை சிறப்பு அதிகாரிகள் குழுவொன்று கண்காணித்து வருகின்றது.

இந்தத் தேர்தலில் மூன்று மாகாணங்களிலும் உள்ள 43 இலட்சத்து 56 ஆயிரத்து 263 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணி அடுத்தவாரம் நிறைவடையும் என்று தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை போதிய பாதுகாப்பின்றி வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப் பட்டு வருவதாகவும் இதனால் மோசடிகள் இடம்பெற வாய்ப்புக்கள் உள்ளது என்றும் ஐ.தே.க. அண்மையில் குற்றஞ் சாட்டியுள்ளது. (அ-2)


அரச அங்கீகாரம் பெற்ற முதன்மைச் சாரதிப் பயிற்சி பாடசாலை

## New Nelson Learners
## நியூ நெல்சன் லேணர்ஸ்

89, Kandy Road, Chundukuli, Jaffna.
TP: 0212224527,0773581916,0777906064 Fax: 021 222 9109

- சாரதிப் பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவமிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புக்கள்
- அதி கூடிய பயிற்சி நேரங்கள் அதி கூடிய பயிற்சி காலங்கள்
- தவணை முறைக் கட்டணங்கள்
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.

நவீன வாகனங்களில் வாகன பயிற்சிகள்

A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு 10% கட்டணக் கழிவு எமதுசகல கிளைகளிலும் வழங்கப்படும்.




(சி/4279)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து(V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா : 30 செ 2உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L மின் பொறியியலாளர்கனடா Citizen<br>தொ.இ:B2212 | பிறப்பு: 1980 இந்து (Thiru)<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 65 உயரம்: 5' 3" செவ் 8<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ:G2235 |
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: பூசம் 2<br>உயரம்: 5'11" கி.பா:24.5செவ் 7<br>தகைமை/தொழில்: BSc, Phd சிரேஸ்ர விரிவுரையாளர்<br>தொ.இ:B2214 | பிறப்பு: 1980 இந்து (Pa)<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா : 67 செவ் 7 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ:G2242 |
| பிறப்பு: 1974 இந்து(Pa)<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா :18 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/LUK Citizen<br>தொ.இ:B2215 | பிறப்பு: 1982 இந்து(குருகுலம்)<br>நட்சத்திரம்: மூலம் 4கி.பா : 44 செ 1உயரம்: 5'<br>தகைமை/தொழில்: கல்வியற்கல்லூரிஆசிரியை<br>தொ.இ:G2244 |
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா : 17.5 செவ் 4<br>தகைமை/தொழில்: BAபிரதேச செயலகம்<br>தொ.இ:B2216 | பிறப்பு: 1989 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா :23.5 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி (4ம் வருடம்)<br>தொ.இ:G2251 |

சகல தொடர்புகளுக்கும்:-
## கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


# வரலட்சுமி பூசை

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு துர்க்கை அம்மன் ஆலயத்தில் வரலட்சுமி பூசை நிகழ்வுகள் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காப்பு நூல்கள் வழங்கப்படவுள்ளன.

(அ-9-29)





புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!

நல்லூரான் நிழலடியில் 100% Natural Pasteurized and Homogenize ஐஸ்கிறீம் With Minerels, Sylo Food and bavereges (pte) Ltd நிறுவனத்தின் அறிமுக விலையில் எமது நல்லூர் விற்பனை நிலையத்திற்கு வாருங்கள். சுவையுங்கள் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லுங்கள்.

No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003

SYLO: Sweet your Life Orbit

(3587)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கில் மீண்டும் நடமாடும் சேவையை நடத்துக

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான நடமாடும் சேவையை மீண்டும் ஒரு தடவை நடத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இப்பிரதேசத்தில் கடந்த வாரம் நடமாடும் சேவை இடம்பெற்றது.

ஆயினும் பிரதேச மக்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்ட கால அவகாசம் போதமையால் வெளியிடங்களுக்கு சென்ற மக்களும் தகவல் அறியாதவர்களும் இச் சேவையை பெறமுடியாமல் போயுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இங்குள்ளவர்களில் பலர் தேசிய அடையாள அட்டை இன்றியும் அவ் அட்டையை புதுப்பிக்க வேண்டிய நிலையிலும் உள்ளனர் என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, பொறுப்புக்குரியவர்கள் மக்களின் நலனில் அக்கறை செலுத்தி மீண்டுமொருமுறை நடமாடும் சேவையை நடத்த முன் வர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்தோடு, நடமாடும் சேவை நடைபெறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக அறிவித்தல் தர வேண்டுமென அப்பிரதேச மக்கள் வேண்டுகோள்ளையும் விடுத்துள்ளனர். (அ-9-10)




# நாகர்கோவில்- சுண்டிக்குளம் வரை வீதியை புனரமைக்குக!

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடற்கரை வீதியில் வெற்றிலைக் கேணி, வீரகத்தி பிள்ளைதொடுவாய் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாலத்திற்கான வீதியை செப்பனிட்டுத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாகர் கோவிலிருந்து சுண்டிக்குளம் வரை நீண்டு செல்கின்ற இந்த வீதியை வெற்றிலைக் கேணி கிழக்குப் பக்கமாகவுள்ள கட்டைக் காடு, கேவில், நித்திய வெட்டை கோக் கறுப்பு, வண்ணாங்குளம், சுண்டிக்குளம் ஆகிய கிராம மக்கள் பயன்படுத்தி வருகின்றன.

கிராம மக்களின் போக்குவரத்தை கருத்தில் கொண்டு இங்கு புதிய பாலம் ஒன்று 2012 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ள போதிலும் வீதிகள் புனரமைத்துக் கொடுக்கப்படவில்லை. பாலத்திற்கு கிழக்கு,மேற்குப் புறமாகவுள்ள சுமார் 500 மீற்றர் தூரமுள்ள வீதி குன்றும் குழியுமாகவும் மணல் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது.

இதனால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி நின்று அப்பகுதியால் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களின் சக்கரங்கள் அவற்றுள் புதையுண்டு பயணிகளுக்கும் பேருந்து ஓட்டுநர்களுக்கும் சிரமங்களைக் கொடுப்பதால், இப் பாதையில் பயணிக்கும் பேருந்துகள் வெற்றிலைக் கேணிஅல்லது ஆழியவளையுடன் பிரயாணத்தை இடை நிறுத்தி விட்டு திரும்புகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளால் வெற்றிலைக் கேணிக்கு அப்பாலுள்ள கிராம மக்கள் நடந்து செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குட்பட்டுள்ளனர்.

எனவே, தற்பொழுது பருவ மழை ஆரம்பித்துள்ளமையால் துரிதகதியில் வீதி புனரமைப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-64)

# இளையோருக்கான தொழிற் பயிற்சிகள்

(தனங்கிளப்பு)

கைதடி நுணாவில் அறவழி நிலையத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட கிளையூடாக தொழிற் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.




இப் பயிற்சி நெறியில்,தையல், அழகுக் கலை, கணனி மென்பொருள், வன்பொருள் ஆகிய நான்கு பயிற்சி நெறிகள் இடம்பெற்று வருகின்றன.

இப்பயிற்சி நெறிக்கு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களும் பரீட்சை நிறைவடைந்த பின்னர் பங்கு பற்றலாமென தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

பயிற்சி நெறிகள் வாரத்தில் 5 நாட்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-37)

# திருட்டுக்களை ஒழிக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மக்கள் கோரிக்கை

(மிருசுவில்)

மிருசுவில் பிரதேசத்தில் அதிகரித்துள்ள திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆரம்பத்தில் இப் பிரதேசங்களில் வளர்க்கப்பட்டு வந்த ஆடு, மாடு போன்றவை களவாடப்பட்டுவந்தன.

இந்நிலையில் பிரதேச இளைஞர்கள் ஒன்று கூடி இரவுகளில் காவல் இருந்த போதும், திருடர்களைப் பிடிக்கமுடியவில்லை. இதனால் திருடர்கள் என சந்தேகப்படுவோரின் வாகனங்களின் இலக்கங்களைக் குறித்து கொடிகாமப் பொலிஸாரிடம் அப்பகுதி இளைஞர்கள் ஒப்படைத்திருந்தனர்.

இவ்வாறு இலக்கங்களை ஒப்படைத்து ஒரு மாதகாலமாகியபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது திருடர்கள் இப்பிரதேசத்தில் வீடுகளுக்குள் புகுந்து பொருட்கள், பணம், நகை என்பனவற்றை துணிச்சலுடன் திருடிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக உசன், கொடிகாமம் போன்ற பிரதேசங்களிலேயே இத்திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எனவே, கொடிகாமம் பொலிஸார் திருட்டுச் சம்பவங்களை இல்லாதொழிக்க விரைந்து நடவடிக்கை எடுத்து உதவ வேண்டுமென பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (அ-9-85)

# 2011 இல் நிதி ஒதுக்கிய போதும் வீதி புனரமைப்பு இடம்பெறவில்லை

(தனங்கிளப்பு)

மறவன் புலோ கிராமத்தின் வீதிப் புனரமைப்பிற்காக 2011 ஆம்ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டடுள்ள போதிலும்,

இதுவரை முழுமையாக புனரமைப்பு பணிகள் பூர்த்தியடைய வில்லையென மக்கள் கவலை. வெளியிட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இக்கிராமத்தில் 5 பிரதான வீதிகள் உள்ளன.

இவற்றில் சகலகலாவல்லி வித்தியாலய பாடசாலை வீதி, மறவன் புலோ வடக்கு வீதி, மணற்காட்டு வீதி என்பவையே புனரமைப்புச் செய்யப்படாதுள்ளன.

இவ்வீதி புனரமைப்புக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் வீதிப் புனரமைப்பு இடம்பெறாதிருப்பது ஏன்? என கிராம மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வீதிகள் சேதமடைந்து காணப்படுவதால் போக்குவரத்தை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என பொது மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே, பருவ மழை காலம் ஆரம்பமாகவுள்ளமையால் துரிதகதியில் வீதிகளைப் புனரமைப்புச் செய்ய சாவகச்சேரி பிரதேச செயலகமும், பிரதேச சபையும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-37)

# கிருஸ்ணஜெயந்தி உற்சவம்


(தும்பளை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயத்தில்கிருஸ்ண ஜெயந்தி உற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவு 12 மணி முதல்ஆரம்பமாகவுள்ளது.

உற்சவத்தின் ஆரம்ப நிகழ்வான கிருஸ்ணன் பிறப்பு வைபவம் 28 ஆம் திகதி புதன் கிழமை இரவு 12 மணிக்கு நடைபெற்று, தொடர்ந்து 108 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.


மறுநாள் 29 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று உறியடி உற்சவமும் இடம்பெறவுள்ளது. (அ-9-19)





யா/வட இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினுக்கு பாடசாலை அதிபர் திருமதி தேவராணி நவரத்தினம் நினைவுச் சின்னம் வழங்கிவைப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்று புகழ்மிக்க யாழ். நல்லூர் கந்த சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் பெற்றது. இன்று காலை கொடியேற்றம் ஆரம்பமாகும். நல்லூர்க் கந்தனின் உற் சவம் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெற வுள்ளன. இதனை முன்னிட்டு நேற்றுக் காலை யாழ். திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள வைத்தியர் ந.சத்தியமூர்த்தியின் இல்லத்திலிருந்து கந்தையா தர்மகுலசிங்கத்தினால் எடுத்து வரப்பட்டு சட்ட நாதர் வீதியில் அமைந்துள்ள கொடித்தேர் மடத்தில் முருகப் பெருமானுக்கு விசேட பூசைகள் இடம்பெற்றன. பின் அக்கொடிச்சீலை சித்திரத் தேரில் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அடியவர்கள் புடைசூழ வீதியில் பவனியாக எடுத்து வரப்பட்டு ஆலய பிரதான சிவாச்சாரியாரிடம் நேற்று முற்பகல் 9.50 மணியளவில் ஒப்படைக்கப்பட்டது.

(படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

# நவாலியூரானின் ஆளுமையை காட்டுகிறது வீசிய புயல் நாவல்

கலாபூஷணம் நவாலியூர் நா. செல்லத்துரை அவர்களின் 'வீசிய புயல்' என்ற நாவலுக்கு அணிந்துரை வழங்குவதில் நான் மிகவும் பெருமையடைகின்றேன்.

நவாலியூர் நா.செல்லத்துரை யாழ்ப்பாணத்து மக்களால் மட்டுமல்ல பிறதேசத்து மக்களாலும் மிகவும் நன்கு அறியப்பட்டவர்.

கணிசமான நாடகங்களை எழுதியும் இயக்கியும் நடித்துமுள்ள இவர் அத்துடன் மட்டும் நின்று விடாமல் கவிதை, சிறுகதை, நாவல் என அனைத்துத் துறைகளிலும் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளார். இவ்வாறான பின்னணி நவாலியூராரை நாடறியச் செய்ததெனலாம்.

தமிழ் நாவல் வரலாற்றில் ஈழத்தவர்களுக்கும் கணிசமான பங்குண்டு என்றே சொல்லவேண்டும். தமிழகத்துப் படைப்பாளிகளுக்கு நிகராக இம்மேநாட்டு இலக்கிய வடிவத்தை ஈழத்தவர் பலரும் கையாண்டு வெற்றி பெற்றுள்ளனர். இவ்வாறான ஒரு பரம்பரைத் தொடர்ச்சியாகவே நவாலியூரானின் வீசிய புயலைப் பார்க்கமுடிகிறது.


'முகை வெடித்த மொட்டு' என்ற இவரது நாவல் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசை வென்ற நாவலாகும். இந்த அனுபவப் பின்புலத்தில் வீசிய புயலை நீண்ட இடைவெளியின் பின்னர் தந்துள்ளார்.

'வீசிய புயல்' எண்பதுக்கு மேற்பட்ட பாத்திரங்களையும் பல்வேறு கதைச்சம்பவங்களையும் உள்ளடக்கிய நீண்ட ஒரு நாவலாக அமைந்துள்ளது. ஒருகாலகட்டத்து யாழ்ப்பாணத்தைத் தன்னுடைய நாவலினூடே நாவலாசிரியர் காட்சிப்படுத்த முனைந்துள்ளமை புலனாகிறது.

வெவ்வேறு பிரதேசங்களில் கதை நிகழும் போது அந்தந்தப் பிரதேசங்களுக்கேயுரிய வட்டாரப் பேச்சு மொழியையும் அவ்வப் பிரதேசங்களுக்கேயுரிய பண்பாட்டு வழக்கங்களையும் இயன்றவரை தன்னுடைய நாவலில் சிறைப்படுத்த முயன்றுள்ளார்.

நாவலில் பயின்றுள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழில் ஒலி பெயர்த்துத்தரும் இடங்களில் (Tran slireration) ஆங்கில எழுத்துக்களைத் தமிழ் எழுத்துக்களுடன் கலந்து தந்திருக்கிறார் நாவலாசிரியர். குறித்த சொல்லைச் சரியாக உச்சரிக்கவேண்டும் என்ற எண்ணம் காரணமாக அவர் இதனைச் செய்திருக்கிறார்.

தற்போதைய கெடுபிடிகள் இல்லாத வழமையான யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தன்னுடைய நாவலினூடே சித்திரித்த விடயத்தில்




வேண்டும். நவாலியூராருக்கு முன்பே டானியல், தெணியான், செங்கை ஆழியான், பாலமனோகரன், செ.கணேசலிங்கன் முத லானோர் மண்வாசனை வீசவும் வட்டாரப் பண்பு நாவல்களைப் படைத்துள்ளனர். மேலே குறிப் பிடப்பட்டவர்களது படைப்புக்கள் நவாலியூராரது படைப்பாற்றலை மேலும் செழுமைப்படுத்த உதவும்.

'வீசிய புயல்' என்ற நாவல் நவாலியூராரின் படைப்பாக்க ஆளுமையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

தமிழ்கூறும் நல்லுலகிற்கு கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை அவர்கள் மேலும் பல நாவல்களைத் தந்து நாடகத்துறையில் சுவடுபதித்ததுபோல நாவல் படைப்பிலும் அச்சுவடு பதிக்கவேண்டும்.

கலாநிதி.கி.விசாகரூபன்
தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# சமூக நோக்குடன் சிந்தித்து அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொள்ள முன் வாருங்கள்

## முஸ்லிம் அமைச்சர் மற்றும் எம்.பிக்களிடம் கிழக்கு மாகாண உறுப்பினர் ஜெமீல் கோரிக்கை

(திருகோணமலை)

**பேரினவாத சக்திகள் தொடர்ச்சியாக பள்ளிவாசல்களைத் தாக்கி முஸ்லிம்கள் மீது காடைத்தனங்கள் கட்டவிழ்த்து விட்டுள்ள போதிலும் அரசாங்கம் அவற்றைத் தடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காது அலட்சியம் காட்டிவருகின்ற இச்சூழ்நிலையில் அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் தமது அமைச்சுப் பதவிகளை தூக்கி எறிந்துவிட்டு சமூகத்தின் ஒட்டுமொத்த எதிர்ப்பை வெளிப்படுத்த முன்வரவேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் குழுத்தலைவருமான ஏ.எம்.ஜெமீல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கொழும்பு கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதலைத் தொடர்ந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

தம்புள்ள பள்ளிவாசல் தொடக்கம் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் வரை நாட்டில் நாற்பதுக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களும் மதரசாக்களும் தாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மஹியங்கனை பள்ளிவாசல் உட்பட பல பள்ளிவாசல்களும் மதரசாக்களும் பலாத்காரமாக மூடப்பட்டிருக்கின்றன.

இவைதவிர முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களும் இறைச்சிக் கடைகளும் நாளாந்தம் அச்சுறுத்தப்பட்டும் தாக்கப்பட்டும் வருகின்றன. இதன்காரணமாக இலங்கை முஸ்லிம் மக்கள் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்டு நிம்மதியிழந்து மிகவும் பீதியுடன் இக்கட்டான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த இரு வருடங்களாக இவ்வாறு பேரின வெறியாட்டம் முஸ்லிம் சமூகத்தின்மீது தொடுக்கப்பட்டிருக்கின்ற போதிலும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது.

முஸ்லிம்களினதும் பள்ளி வாசல்களினதும் பொருளாதார மையங்களினதும் பாதுகாப்பு தொடர்பில் முஸ்லிம்தலைவர்களினதும் அமைச்சர்களினதும் கோரிக்கைகள் மற்றும் கருத்துக்கள் அரசாங்கத்தினால் செவிசாய்க்கப்படவில்லை என்றே மக்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் புனித நோன்புப் பெருநாளை அனுஷ்டித்துக்கொண்டிருந்தபோது கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் பேரினவாதக் காடையர்களினால் தாக்கப்பட்டிருப்பதானது பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

இதைவிட பள்ளிவாசலுக்கு பாதுகாப்புவழங்கிக்கொண்டிருந்த போதும் இச்சம்பவம் இடம்பெற்றது எவ்வாறு?

முஸ்லிம் எம்.பிக்களின் ஆதரவுடனேயே இந்த அரசாங்கம் மூன்றில் இரண்டுபெரும்பான்மையுடன் ஆட்சி நடத்திவருகின்றது.

இந்நிலையில் முஸ்லிம் எம்.பிக்களும் அமைச்சர்களும் தனிப்பட்ட நலன்களுக்கு அப்பால் சமூக நோக்குடன் சிந்தித்து அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொள்வதுடன் முஸ்லிம் அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்து விட்டு ஒற்றுமையுடன் சமூக, அரசியல் பணியை முன்னெடுப்பதற்கு முன்வர வேண்டும் என முஸ்லிம் சமூகத்தின் பெயரால் அறைகூவல் விடுக்கின்றேன்.

இதன்மூலம் குறைந்த பட்சம் இலங்கை முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் குறித்து சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கமுடியும் என்பதுடன் எமது நாட்டுக்கு தாராளமாக பொருளாதார உதவிகள் வழங்கி வருகின்ற அரபு, முஸ்லிம் நாடுகளின் அழுத்தங்களை பிரயோகிக்க செய்யமுடியும் என்பது எமது நம்பிக்கையாகும். (அ-2)

# பிள்ளையார் ஆலய மஹோற்சவம்

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடி பிள்ளையார் ஆலய மஹோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

உற்சவ காலத்தில் நாளை செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறமும் நடைபெறவுள்ளது. 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (அ-9-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிமலை



## ஆன்மீகம் 84

இவன் சமூகத்தால் கொடுமைகளை அதிகமாக அனுபவித்த மனிதனாக இருப்பான் என்ற முடிவுக்கு வந்து நீங்கள எல்லாவற்றையும் துறந்துவந்தவராகத் தெரியவில்லை. ஏதோ மறைந்து வாழ்வது போல் தோன்றுகிறது. அதைப் பற்றி அவரிடம்கேட்க. அவன் முகத்தில் வேதனை பரவியது. சற்றுநேர மௌனத்திற்குப்பிறகு ஆம்- நீங்கள் நினைப்பது சரிதான்! நான் செய்யாத குற்றத்தை என் மேல் என் உறவுக்காரர்களே சுமத்தி என்னை அழிக்க முயன்றார்கள்! அவர்களுக்கு காவல் துறையும் துணைக்கு வந்தது. அவர்களிடம் நான் அகப்பட்டால் என் வாழ்வு முடிந்துவிடும். பணபலத்தைக் கண்டு காவல்துறையே சலாம் போடும்போது எனக்கு நீதி கிடைக்காது. இந்த மலையில் என்னைத் தேடி யாரும் வரமாட்டார்கள். தற்போது இதுதான் என் காவல் கோட்டை என்றான் அந்த மனிதன். நான் பேச்சை மாற்ற விரும்பி ஆமாம் நாம அடுத்து போக வேண்டிய புதுமை லட்சுமி அம்மன் கோயில் இன்னும் எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்று வினவினேன். அதற்கு அந்த தவசி கொஞ்சம் தூரம்தான் அரை மணி நேரத்தில் சென்று விடலாம் என்று சொன்னான். நான் கடைசி முயற்சிக்காக அவனை சிரிக்க வைக்க வேண்டும் என்று எண்ணி அவனிடம் ஐயா தவசி! உங்களிடம் ஒன்று கேட்பேன் தருவீர்களா? என்று கேட்டேன்... என்ன வேணும் என்றான் அவன். பணம் எவ்வளவு கேட்டாலும் தருகிறேன்- ஒரு அரைகிலோ சிரிப்பு கிடைக்குமா? என்றேன்! அதைக் கண்டு அந்த மலையை புரட்டிச தள்ளிவிட்டார் போல் இருந்தது அவன் சிரித்தது. இங்கிருந்து 2 அரை மணி நேரம் பயணித்து நாம் குமளி மலையிலுள்ள கௌமாரி கோவிலுக்கு அருகிலுள்ள தபோதன சித்தர் குகைக்குச் சென்றோம். இக்குகைக்கு சிறிது தூரத்தில் ஜோதி விருட்சமிருக்கிறது. இந்த மரத்தை வெட்டினால் பால் வரும். இரவில் சந்திரனில்லாத காலத்தில் மினிமினிப் பூச்சிகள் ஒட்டியிருப்பது போல் ஜோதி மயமாயத் தோன்றும். இதன் பின்னர் சித்தர் பெருமான் எம்மை கொல்லி மலைத் தொடரில் உள்ள குடகுமலை ஆராதார சித்தர் குகைக்கு அழைத்துச் சென்றார். இக்குகையின் முகத்துவாரம் சிறியதாகவும் உட்பாகம் விசாலமாகவும் கர்ணப்பட்டது. அதற்குள் அநேக சித்தர்கள வாழ்ந்ததாக ஆசான் கூறினார்.



நம்பிமலையில் ஸ்ரீ காக புஜண்டரும் அன்னை சித்தரும் பக்தர்களும்

ஆராதாரச் சித்தர் குகைக்குத் தென்புறம் உள்ள குருமலையில் கூணக் கண்ணர் குகை உள்ளது. அங்குசென்று குறை அருகிலுள்ள வெள்ளைப் பாறையில் நாங்கள் சற்று இளைப்பாறினோம்.

அருள்மிகு புதுமைலட்சுமி அம்மன்கோயில் ஆதியில் சித்தர்கள் வழிபட்ட திருக்கோயிலாகும். அருகே ஓடும் ஆற்றங்கரையில் உள்ள வினாயகர் கோயிலில் பூசைகளை முடித்துக் கொண்டு அம்மன் கோயிலின் அருகிலேயே அன்றிரவு தங்கினோம். அங்கேயே சமையல் செய்து- இரவு உணவை முடித்துக்கொண்டோம்.

இந்த இடத்திற்கு நான் வந்தது முதற்கொண்டு அது எனக்கு மிகவும் பழக்கமான இடமாகவே என் உள்ளுணர்வுக்கு தோன்றியது! இன்று தானே முதன் முதலாக இங்கு வருகிறோம். ஆயினும் இந்த உணர்வுக்கு என்ன காரணம்? பலமுறை இந்த இடத்தை இதற்கு முன்னரே கனவுகளில் கண்ட நினைவுகள் என் மனக் கதவினைத் தட்டின. மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது. இங்கு சித்தர் வாழ்ந்த இடங்களும் அவர்களின் ஜீவ சமாதிகளும் ஏராளமாக காணப்பட்டன. இரவில் நான் தூங்காமல் தூங்கி சுகம் அனுபவித்தபோது- கண்ட அற்புத காட்சிகளை இப்போது நினைத்தால் உடல் சிலிர்க்கும்.


தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# "தண்ணீரையாவது பெற்றுத் தாருங்கள்"
# இன்னமும் மீட்கப்படாத மக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவிலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள 7 தமிழ் பிரதேச செயலாளர் பிரிவிலும் ஒரு ஏக்கருக்கு மேல் ஒப்பக்காணிகள் வைத்திருந்தால் மேலதிகமானவற்றை அபகரிப்பதற்கு மத்திய மற்றும் மாகாண சபை சிங்கள ஆட்சிய. .ர்கள் சட்ட வரையறையைப் பயன்படுத்தவுள்ளனர்.

கிழக்கு மாகாணம், போர் முடிவடைந்த பின்னர் பூரண அபிவிருத்தி பெற்றுள்ளதாக தெரிவிக்கும் கொழும்பு அரசாங்கம், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் வசிக்கும் கிராமங்கள் இன்னும் அழிவடைந்த எச்சங்களாகவே காணப்படுகின்றன. அம்பாறை மாவட்டத்தின் மத்திய முகாம் கொலனி தமிழ் கிராமத்தில் சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்தபோது, தற்போது 150 குடும்பங்கள் மாத்திரம் வாழ்ந்துவருகின்றனர்.



அடிப்படைத் தேவைகளான தண்ணீர், மலசலகூட வசதிகள், நிரந்தர வீட்டுப் பிரச்சினை மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக எதிர்கொண்டுள்ள இப்பகுதி மக்களின் தேவைகள் பூர்த்தி செய்து கொடுப்பதற்கு அரசாங்கமோ அல்லது எந்த ஒரு அரச சார்பற்ற நிறுவனங்களோ முன்வராமையினால் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது அவர்கள் வசித்துவரும் தற்காலிய கொட்டகைகள் கூட சிதைவடைந்துள்ளது. மீள்குடியேற்றம் என்ற போர்வையில் காடுகள் மண்டி, கட்டடம் சிதைவடைந்த பகுதிக்குள் மக்களை கால்நடைக்கு ஒப்பாக அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் நடாத்துவது பெரும் வேதனையளிக்கிறது. போதுமான நிலப்பரப்பு இருந்தும் தங்குவதற்கான ஒரு நிரந்தர வீடுகள் இல்லை. சாப்பாடு இல்லாவிட்டாலும் தண்ணீரையாவது பருகுவதற்கு தண்ணீர் கூட இல்லை. வீட்டில் சுகயீனமுற்றிருக்கும் பிள்ளைகளைத் தனிமையில் விட்டுவிட்டு ஒரு மணித்தியால நேரம் கால்நடையாக நடந்து சென்றுதான் குடிநீர் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது என அந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில், நாவிதன்வெளி, ஆலையடி வேம்பு, கல்முனை தமிழ்ப் பிரிவு அக்கரைப்பற்று போன்ற தமிழ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடந்த காலத்தில் இராணுவத்தின் தாக்குதலின் பாதிப்புகளிலிருந்து மக்கள் இன்னும் மீளெழவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களை மீளவும் கட்டியெழுப்புவதற்காக குடிநீர்த்திட்டம், வீதி அபிவிருத்தித்திட்டம், நிரந்தர வீட்டுத் திட்டம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்காக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய யூனியன், உலக வல்லரசு நாடுகளான அமெரிக்க உட்பட ஜப்பான், இந்திய, சீனா போன்ற நாடுகள் கடன் அடிப்படையிலும் மானியமாகவும் பல பில்லியன் கணக்கில் நிதி வழங்கிய போதிலும் அதன் பயன்கள் பாதிக்கப்பட்ட மக்களை இன்னும் சென்றடையவில்லை.



அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பிரிவுகளுக்கென ஒதுக்கப்படும் நிதிகள் அரசியல் தலையீட்டினால் உரிய முறையில் கையாளப்படுவதில்லை. வெளிநாடுகளினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் வழங்கப்படும் பெருந்தொகையான நிதி, பாதிக்கப்பட்ட தமிழர்கள் தவிர்ந்த, முஸ்லிம் மற்றும் சிங்களவர்களின் பிரதேசங்கள் மாத்திரமே மேலும் மேலும் அபிவிருத்தி செய்யப்படுகிறன.

மத்திய முகாம் பகுதியில் காணிகள் எவ்வாறு அபகரிக்கப்படுகின்றதோ அதேபோன்று சிங்கள்வர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அருகிலுள்ள தமிழ் கிராமங்கள் அபகரிக்கப்படுகிறது. போர் முடிவடைந்த நிலையிலும் இன்னும் மக்கள் இடப்பெயர்வுகளைத்தான் தினம் தினம் எதிர்கொள்கின்றனர். தமிழ் மக்களுக்கு உதவி செய்வதாகத் தெரிவித்து சிங்கள இனவாத அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டு தமிழர் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்துக்கொண்டு சுக போக வாழ்க்கை வாழும் தமிழ் அரசியல்வாதிகள் இதுவரையில் மக்களின் பாதிப்புக்கள் தொடர்பாகக் குரல் கொடுக்கவில்லை.

தமிழர்களின் பூர்வீகக் கொணிகள், கால்நடைக்கான மேச்சல் தரைகள் என ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் சிங்களவர்களினாலும் முஸ்லிம்களினாலும் அபகரிக்கப்படும் நிகழ்வை இந்த அரசியல்வாதிகளினால் வேடிக்கைதான் பார்க்க முடிகிறது. இவற்றுக்கெல்லாம் தீர்வாக அனைத்துலகம் தலையிடுவதன் மூலமே தற்காலிகமாகவேனும் நில அபகரிப்பைத் தடுக்க முடியும்.


-எழுவான்-

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நம்பிக்கைத் துரோகிக்கு... நல்ல பாடம்!



ஒரு கடற்கரையிலே பெரிய நாவல் மரம் ஒன்றிருந்தது. அதில் எப்பொழுதும் பழங்கள் இருந்து கொண்டேயிருக்கும். அந்த மரத்தில் ரக்தமுகன் என்றொரு குரங்கு இருந்துவந்தது.

ஒருநாள் கராலமுகன் என்ற பெரிய முதலை ஒன்று அந்த நாவல் மரத்தின் அருகில் வந்தது. ரக்தமுகன் அதைப் பார்த்து "நீ என் விருந்தாளி. அமுதத்துக்கொப்பான நாவற்பழங்களைத் தருகிறேன். சாப்பிடு!" என்று குரங்கு கூறி நாவற்பழங்களை முதலைக்குக் கொடுத்தது.

பழங்களை முதலை சாப்பிட்டது. வெகுநேரம் குரங்குடன் பேசி இன்பமடைந்த பின் தன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றது.

இப்படி நாள்தோறும் முதலையும் குரங்கும் நாவல் மரத்தின் நிழலையடைந்து நல்ல விடயங்களைப் பற்றிப்பேசி இன்புற்றுக் காலம் கடத்திவந்தன.

தான் சாப்பிட்டது போக மிஞ்சிய நாவற்பழங்களை முதலை வீட்டுக்குக் கொண்டு போய் தன் மனைவிக்குக் கொடுத்துவந்தது.


ஒருநாள் முதலையின் மனைவி, "அமிர்தம் போலிருக்கும் இந்த நாவற்பழங்கள் உங்களுக்கு எங்கே கிடைக்கிறது?" என்று முதலையைக் கேட்டது.



"அன்பே, ரக்தமுகன் என்றொரு குரங்கு இருக்கிறது. அது என் நெருங்கிய நண்பன். அதுதான் இந்தப் பழங்களை எனக்கு அன்போடு தருகிறது" என்றது முதலை.

அதற்கு முதலையின் மனைவி, "அமிர்தம் போல் இருக்கும் இந்தப் பழங்களை எப்போதும் சாப்பிட்டுக் கொண்டிருப்பவனுடைய நெஞ்சம் கட்டாயம் அமிர்தம் போலத்தான் இருக்கும். நீ என்னை மதிக்கிறாய் என்றால் எனக்கு அந்தக் குரங்கின் நெஞ்சைக் கொண்டு வந்துகொடு. அதை நான் சாப்பிட்டு நோயும் முதுமையும் இல்லாமல் என்றும் உன்னோடு விளையாடிக் கொண்டிருப்பேன்" என்றது.

"அன்பே, முதலாவதாக அது நமக்குச் சகோதரன் மாதிரி, இரண்டாவதாக, அது நமக்குப் பழங்களைத் தருகிறது. எனவே, அதை நான் கொல்ல முடியாது. இந்த வீணான ஆசையை விட்டுவிடு" என்றது.



அதற்கு முதலையின் மனைவியோ, "அந்த குரங்கை எனக்காக கொடுக்கவில்லை என்றால் நான் இறந்துவிடுவேன்" என்று சொல்லி கோவமாக சென்றது.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அதன் கண்களில் நீர் நிறைந்தது. இனி நான் என்ன செய்வேன்? அந்தக் குரங்கை எப்படிக் கொல்வது? என்று சிந்தித்தபடியே குரங்கிடம் போயிற்று.

வெகுநேரம் கழித்து முதலை கவலையோடு வருவதைக் குரங்கு பார்த்தது. "நண்பனே, ஏன் இவ்வளவு நேரம்? ஏன் சந்தோஷத்தோடு பேசமாட்டேன் என்கிறாய்? நல்ல நீதிகளையும் சொல்ல மாட்டேன் என்கிறாய்?" என்று குரங்கு கேட்டது.

"நண்பனே என் மனைவி 'ஏ நன்றி கெட்டவனே, என் முகத்தில் விழிக்காதே. தினந்தோறும் நீ நண்பனிடம் பழங்களைப்பெற்றுச் சாப்பிடுகிறாய்.

ஆனால், அதற்குப் பதில் உபசாரம் செய்யும் முறையில் அதை உன் வீட்டு வாசலுக்கும் நீ அழைத்து வரவில்லையே! இந்த செயலுக்கு உனக்கு மன்னிப்பே கிடையாது என்றது. ஆகவே, நீ கராலமுகனை நம் வீட்டுக்கு அழைத்து வா.

அப்போதுதான் நீ பதில் உபசாரம் செய்ததாகும். இல்லாவிட்டால் நீ என்னை இனிமேல் உயிரோடு பார்க்க முடியாது. மறு உலகத்தில்தான் பார்க்க முடியும்' என்று சொன்னாள்.

அவள் சொற்களைக் கேட்டுவிட்டு உன்னிடம் வந்திருக்கிறேன்.


உன் விடயமாய் அவளோடு சண்டை போட்டத்திலே இவ்வளவு நேரமாகிவிட்டது. நீ என் வீட்டுக்கு வா! என் மனைவி ஆவலோடு உன்னை எதிர்பார்த்து வர வேற்பதற்குரிய ஏற் பாடுகளைச் செய்திருக்கிறாள்" என்றது முதலை.

"நண்பனே அண்ணி சொன்னது சரிதான். எவ்விதமெனில் தருவது, பெறுவது, மனம் விட்டுப் பேசுவது, கேட்பது, விருந்து உண்பது, படைப்பது இவை ஆறும் நட்புக்கு அடையாளங்கள் அல்லவா?

ஆனால், நான் காட்டிலும் இருப்பவனாயிற்றே! உங்களுடைய வீடு நீருக்கடியில் அல்லவா இருக்கிறது! அங்கே நான் எப்படி வரமுடியும்?" என்றது குரங்கு.

"நண்பனே, கடலுக்கடியில் ஒரு அழகிய மணல் திட்டில் என் வீடு இருக்கிறது.

எனவே என் முதுகில் ஏறிக்கொண்டு பயமில்லாமல் இன்பமாய் வா!" என்றது முதலை.



குரங்குக்கு ஆனந்தம் பிறந்தது.

நண்பனே, அப்படியானால் சீக்கிரமாகக் கிளம்பலாமே. ஏன் தாமதிக்க வேண்டும்? இதோ நான் உன் முதுகின்மேல் ஏறிக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு குரங்கு முதலையின் முதுகின்மேல் ஏறிக் கொண்டது.

தொடரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய உச்சி மாநாட்டில் பிரிட்டன் கலந்துகொள்ளக் கூடாது

## தமிழ் அமைப்புக்கள் கடும் அழுத்தம்

(கொழும்பு)

**பொதுநலவாய அமைப்பு மகாநாட்டில் பிரித்தானியா கலந்து கொள்ளக்கூடாது என பிரித்தானியாவின் தமிழ் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. இதனை முன்வைத்து லண்டனில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவும் அவை திட்டமிட்டு வருகின்றன.**

ஏற்கனவே தமிழ் அமைப்புகள் சில இது தொடர்பாக விடுத்த கோரிக்கையை பிரித்தானிய அரசு நிராகரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால், இம்முறை புதிதாக அனைத்து தமிழ் அமைப்புகளும் ஒன்றிணைந்து மீண்டும் அதே கோரிக்கையை முன் வைத்துள்ளன.

அரசின் சில முக்கிய அமைச்சர்களைச் சந்திக்கவும் தமிழ் அமைப்புக்கள் திட்டமிட்டுவருகின்றன. பிரித்தானிய தமிழர் பேரவையும் நாடு கடந்த தமிழீழ அரசும் தற்போது இது விடயத்தில் தீவிரம் காட்டி வருகின்றன.

தமிழருடனான நல்லிணக்க நடவடிக்கை எதனையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை. அதே நேரத்தில் போர் முடிந்து நான்கு ஆண்டுகளைக் கடந்த போதிலும் தமிழர் பிரச்சினைக்கு எந்த ஒரு தீர்வும் இதுவரை காணப்படவும் இல்லை.

மொத்தத்தில் சர்வதேசத்திற்கு இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. தமிழரின் வாழ்க்கைத் தரம் அங்குத் தொடர்ந்தும் கேள்விக் குறியாகவே உள்ளது.

இந்நிலையில் கொழும்பில் பொதுநலவாய அமைப்பு மகாநாட்டை நடத்துவது அதன் முக்கிய குறிக்கோளை மீறிய செயலாகும். அதனால் பொதுநலவாய அமைப்பு மகாநாட்டை வேறொரு நாட்டுக்கு இடமாற்றம் செய்யவேண்டும்.

அவ்வாறு கொழும்பில் மகாநாடு நடத்தப்படுமாயின் பிரித்தானியா அதில் கலந்து கொள்ளக்கூடாது என பிரித்தானிய தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் இணைந்து குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

பிரித்தானியாவுக்கு அழுத்தம் கொடுப்பதில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரித்தானிய தமிழர் பேரவை பிரதிநிதி ஒருவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதேபோன்று இந்தியாவும் இம் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என அங்கு கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ் நாடு அரசின் ஆளும் கட்சியாகிய அ.இ.அ.தி.மு.க. மிக தீவிரமாகக் குரல் எழுப்பி வருகின்றது. இந்திய நாடாளுமன்றத்திலும் இவ்வாரம் இக் கோரிக்கை எதிரொலித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழீழ ஆதரவு அமைப்பு (டெசோ) தி.மு.க.தலைமையில் பாரிய போராட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளது. நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர்களும் டில்லியில் நாடாளுமன்றத்திற்கு வெளியே போராட்டம் நடத்தியுள்ளனர்.

இந்தியா பொதுநலவாய மகாநாட்டில் பங்குபற்றக்கூடாது. தமிழ் மக்களுக்கு இலங்கை அரசு சம உரிமை வழங்கும் வரை இந்தியா இதுபோன்ற மகாநாடுகள் கொழும்பில் நடைபெறும் பட்சத்தில் அவற்றில் கலந்து கொள்ளக்கூடாது என தி.மு.க.கோரி வருகின்றது.

சென்னையில் ஐந்து சட்டக் கல்லூரி மாணவர்களும் இதே கோரிக்கையை முன்வைத்து தொடர் உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட்டுவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (அ–2)



சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் முத்தமிழ் விழா அண்மையில் கல்லூரியின் ஒறேற்றர் சுப்பிரமணியம் அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்கினேஸ்வரனுக்கு பாடசாலை அதிபர் இ.ஈஸ்வரதாசன் உட்பட பாடசாலை நிர்வாகத்தினரால் நினைவுப் பரிசில் வழங்கப்படுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:–மானிப்பாய் செய்தியாளர்)

# பிரிவினைவாதத்தை தோற்றுவிக்க நவநீதம்பிள்ளை முயற்சிக்கிறார்

## பொதுபலசேனா கூறுகின்றது

(கொழும்பு)

உண்மைக்குப் புறம்பானவற்றை உலகுக்கு எடுத்துக்கூறி, பிரிவினைவாதத்தைத் தோற்றுவிப்பதற்கு கடும் பிரயத்தனம் எடுத்து வருபவரே ஐ.நா. மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை. எனவே அவரை ஒரு உண்மையான நடுநிலையான இராஜதந்திரியாக ஏற்றுக் கொள்ளமுடியாது என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வரும் நவநீதம்பிள்ளை யுத்தத்திற்குப் பின்னரான வடகிழக்கு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்து நியாயமானதும், நடு நிலையானதுமான அறிக்கை ஒன்றை ஐ.நாவுக்கு சமர்ப்பிப்பார் என்பதை எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் உண்மையைத் திரிவுபடுத்தி இலங்கைக்கு எதிராக பல்வேறு கருத்துக்களை தெரிவித்து எமது நாட்டின் நற்பெயருக்கு சர்வதேச மட்டத்தில் பங்கம் ஏற்படுத்தியவரே நவநீதம்பிள்ளை. ஆகையால் அவரின் வருகை நமக்கு நன்மை ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகளாக அமையா.

இவ் விடயம் தொடர்பில் அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எமது நாட்டில் மீண்டும் ஒரு பிரி வினைவாதம் உருவாகுவதற்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாது. ஆனால் நவநீதம்பிள்ளை போன்றவர்கள் இலங்கைக்குள் பிரிவினை வாதத்தை தோற்றுவிப்பதில் தீவிரமாக செயற் பட்டு வருகின்றனர். மூன்று தசாப்த காலமாக நாட்டு மக்கள் யுத்தத்தின் பிடிக்குள் சிக்கியிருந்தனர். வடக்கு–கிழக்கு என்றில்லாது நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள பொதுமக்கள் அனைவரும் அதனால் பல்வேறு சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர் கொண்டு வந்தார்கள்.

ஆனால் அவ்வாறான பிரச்சினைகள் இன்று இல்லாதுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு வடக்கு–கிழக்கு மக்களின் வாழ்வா தாரத்தைக் கட்டியெழுப்பி மீண்டும் பிரிவினை வாதம் ஏற்படாத வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதுவே தற்போதைய தேவையாகவுள்ளது.

இன்று சில சர்வதேச அமைப்புக்களும் நவநீதம்பிள்ளை போன்றவர்களும் உண்மைகளை திரிவுபடுத்தி, பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். ஆனால் அவ்வாறான கருத்துக்களைக் கூறு கின்றவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை எதனையும் செய்யவில்லை எனவும் அவர் தெரிவித் தார். (அ–2)

# ஆர்ப்பாட்டம் நடத்தால் தடுப்பதற்கு இராணுவம்

## சட்டத்தில் திருத்தம் என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

எந்தநேரத்திலும் எந்த இடத்திற்கும் இராணுவத்தினரை அனுப்பும் வகையில் ஜனாதிபதியின் அதிகார சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை அரசாங்கம் வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக எந்த இடத்தில் ஆர்ப்பாட்டம் நடப்பினும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு இனி மேல் இராணுவத்தினரே அனுப்பி வைக்கப்படுவர்.

இதற்கான அதிகாரம் தற்போது ஜனாதிபதியின் கையில் இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ–2)

# சித்தர் பீடத்தில் ஆடிப்பூர விழா

சுயம்பு மேல்மருவத்தூர் அதிபராசக்தி சித்தர் பீட ஆடிப்பூர விழா எதிர் வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலய முன்றிலில் ஆரம்பமாகி பின் அன்னை பராசக்தியின் திருவுருவப் படங்கள் தாங்கி ஊர்வலமாக சென்று சட்டநாதர் சிவன் கோயில் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் அன்னை பராசக்தியின் திருவுருவச் சிலைக்கு பால் அபிஷேக நிகழ்வும் இடம் பெறும். (அ–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண மெய்வல்லுநர் போட்டியில் வவுனியா மாவட்டம் அதிக சாதனை



வவுனியா மாவட்டம் சாதனையாளர்கள்

(வவுனியா)

வடமாகாண மெய்வல்லுநர் போட்டிகளின் போது 21 புதிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

இதன்போது வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்களினால் மட்டும் 15 புதிய சாதனைகள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

வடமாகாண விளையாட்டு விழாவின் மெய்வல்லுநர்களை தெரிவு செய்வதற்கான இறுதிப் போட்டிகள் கடந்த 2ஆம், 3ஆம் திகதிகளில் வவுனியா யூ.சி.மைதானத்தில் இடம்பெற்றன.

இவ் இறுதிப் போட்டிகளின் போதே வடமாகாண மெய்வல்லுநர்களால் மேற்படி 21 சாதனைகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

இதன்படி வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்களால் 15 புதிய சாதனைகளும் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்களால் 4 புதிய சாதனைகளும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்களால் 2 புதிய சாதனைகளும் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய எம்.கமலினி (யாழ்ப்பாணம்), கே.லேகாஜினி (வவுனியார்), கே.நேர்மதி (வவுனியா), ஆர்.சாளினி(வவுனியா), கே.கோகுலவாணி(வவுனியா), பி.பிரணவி (யாழ்ப்பாணம்), எம்.மெற்றில்டா (யாழ்ப்பாணம்), ஆர்.கிருசாந்தினி (வவுனியா), வை.சரணியா(வவுனியா), கே.சதீஸ்குமார் (வவுனியா), ரி.தேவராசன் (முல்லைத்தீவு), எம்.கேசவன் (வவுனியா), எம்.கிருஷ்ணா (யாழ்ப்பாணம்), டபிள்யூ. ஏ.பி.லிவிங்ரன் (யாழ்ப்பாணம்), எச்.ஏ.பி.திசநாயக்க (வவுனியா), கே.சந்திரவேந்தன் (வவுனியா) ஆகியோரே புதிய சாதனைகளைப் பதிவு செய்தவர்களாவர்.

இப்போட்டிகளில் வவுனியா மாவட்டம் முன்னிலையில் இருப்பதோடு யாழ்.மாவட்டம் இரண்டாவது நிலையை தக்கவைத்துள்ளது. (அ-5)

## தேர்தல் வன்முறை தொடர்பில் அதிக முறைப்பாடுகள்

தேர்தல் வன்முறை தொடர்பாக இதுவரை சுமார் 68 முறைப்பாடு கள் தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது.

மத்திய மற்றும் வட மத்திய மாகாணங்களிலிருந்தும் தேர்தல் வன்முறைகளுடன் தொடர்புபட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதில் அதிகமான வன்முறைகள் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றமை தொடர்பானவை என தேர்தல்கள் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

## காலி கடற்பரப்பில் பெரும் கடலரிப்பு

காலி, உணவடுன கடற்கரை பகுதி தற்போது பெரும் கடலரிப்பிற்கு உட்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இக் கடற்கரைப் பகுதியின் இரண்டு கிலோ மீற்றர் வரையான நிலப்பகுதி கடலரிப்பிற்கு உட்பட்டுள்ளது. இதன் காரணமாக உணவடுன சுற்றுலா பிரதேசத்தில் 30 விடுதிகள் மற்றும் வாடி வீடுகள் அரிப்பிற்கு உட்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த கடற்பரப்பிற்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## வேகமாக வாகனம் செலுத்தினால் 1000 ரூபா தண்டம் அறவிடப்படும்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நிர்ணயிக்கப்பட்ட வேகத்தையும் மீறி வாகனத்தை செலுத்தினால் தண்டம் அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது. நிர்ணயிக்கப்பட்ட வேகத்தை மீறும் சாரதிகளிடமிருந்து ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மணித்தியாலத்திற்கு 100 கிலோ மீற்றர் வேகத்திலேயே வாகனங்களைச் செலுத்த வேண்டும். அந்த வேகத்தை மீறுகின்ற சாரதிக ளிடமிருந்தே இத் தண்டப்பணம் அறவிடப்படவுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட வேகத்திற்கும் அப்பால் அதிகூடிய வேகத்தில் வாகனங்களை செலுத்தியமையே இந்த நெடுஞ்சாலையில் அண்மையில் இடம்பெற்ற பல வாகன விபத்துக்களுக்கான காரணமென கண்டறியப்பட்டுள்ளதோடு சுமார் 140 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக் கும் வாகனங்களே விபத்துக்களைச் சந்தித்தன எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு வாகனங்களை செலுத்தியமையால் அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற எட்டு விபத்துக்களில் 11 பேர் பலியாகியுள்ளனர் என்றும் அதிவேக நெடுஞ்சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

அத்துடன் நிர்ணயிக்கப்பட்ட வேகத்தை மீறிய 50 சாரதிகளுக்கு எதிராக முன்னர் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

## அடிப்படை வசதிகளின்றி கூழாவடிக் கிராமம்

புலோலி வட கிழக்கு கூழாவடிக் கிராம மக்கள் தாம் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருவதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

பருத்தித்துறைப் பிரதேச சபைக் குட்பட்ட இக் கிராமத்தில் சுமார் 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இக் கிராமத்து மக்கள் குடி நீருக்காக அயற்கிராமங்களுக்கே செல்ல வேண்டியுள்ளது. இங்கு கிணறுகள் உள்ள போதிலும் அவற்றில் நன்னீர் கிடைப்பதில்லை.

அத்துடன் இக் கிராமத்து சிறுவர்களுக்கான முன்பள்ளி இதுவரை அமைத்துக் கொடுக்கப்படவில்லை. இங்குள்ள சிறார்கள் சந்தா தோட்டப் பிரதேசத்திலுள்ள முன்பள்ளிக்கு சென்றே கல்வி பயின்று வருகின்றனர். இப்பிரதேசத்திலுள்ள திருவருள் சன சமூக நிலையம் பாழடைந்த நிலையில் இயங்கி வருகின்றது.

இந்நிலையத்தை புனரமைப்பதற்கும் அதனை இயங்கச் செயவதற்கும் நிதி பற்றாக் குறை யுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இக் கிராமத்து வீதிகளில் ஒன்று குறுகிய தூரம் வரையே புனரமைப்புச்செய்யப்பட்டுள்ளபோதிலும்ஏனைய பகுதி போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு சேதமடைந்துள்ளது.

இங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் கொட்டில்களிலும் திறந்த வெளியான கொட்டகை போன்ற வீடுகளிலுமே வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறாக வசதிகளின்றி பின்தங்கிய நிலையில் உள்ள கூழாவடி கிராமத்தின் முன்னேற்றத்தை உரியவர்கள் மனம் கொண்டு கவனத்தில் எடுத்து அபிவிருத்தி செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-10)

## 08.2013 12 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கிமு 30 -மார்க் அந்தோனி போரில் தோல்வியடைந்ததை அடுத்து எகிப்தின் கிளியோபாட்ரா தற்கொலை செய்து கொண்டாள்.
- 1833 - சிக்காகோ நகரம் அமைக்கப்பட்டது.
- 1851 - ஐசாக் சிங்கர் தனது தையல் இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1853 - நியூசிலாந்து சுயாட்சி பெற்றது.
- 1877 -அசாப் ஹோல் என்பவர் செவ்வாய்க் கோளின் டெய்மோஸ் என்ற சந்திரனைக் கண்டுபிடித்தார்.
- 1883 - கடைசி குவாகா (வரிக்குதிரை வகை) ஆம்ஸ்டர்டாமில் இறந்தது.
- 1914 - முதலாம் உலகப் போர்: பிரித்தானியா ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் போரை அறிவித்தது. பிரித்தானிய இராச்சியத்தின் அனைத்து குடியேற்ற நாடுகளும் இதனுள் அடங்கின.
- 1952 - மொஸ்கோவில் 13 யூத இன அறிவியலாளர்கள், கவிஞர்கள் கொல்லப்பட்டனர்.
- 1953 - சோவியத் ஒன்றியம் ஜோ 4 என்ற தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை நடத்தியது.
- 1960-எக்கோ ஐ என்ற முதலாவது தொலைத் தொடர்பு செய்மதி ஏவப்பட்டது.
- 1964 - இனவெறிக் கொள்கை காரணமாக தென்னாபிரிக்கா ஒலிம்பிக்கில் விளையாடத் தடை செய்யப்பட்டது.
- 1978 - ஜப்பானும் மக்கள் சீனக் குடியரசும் தமக்கிடையே நட்புறவு, அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.
- 1981 -ஐபிஎம் தனி மேசைக் கணனி வெளியிடப்பட்டது.
- 1985 - ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் 2ஆம் கட்ட திம்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.
- 1990 - அமெரிக்கா, தென் டகோட்டாவில் டிரனொசோரஸ் என்னும் டைனசோரின் முழுமையான எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது.
- 2000 - கே-141கூர்ஸ்க் என்ற ரஷ்யக் கடற்படை நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சியின் போது 118 பேருடன் பாரெண்ட்ஸ் கடலில் மூழ்கியது.
- 2005 - முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பில் அவரது வீட்டில், நீச்சல் தடாகத்தில் வைத்து சுடப்பட்டு மறு நாள் உயிர் நீத்தார்.
- 2005 -இலங்கையின் தமிழ் வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 1887 - எர்வின் சுரோடிங்கர், ஆஸ்திரிய இயற்பியலாளர் (இ. 1961)
- 1924 - ஸியா உல் ஹக், பாகிஸ்தான் ஜனாதிபதி (இ.1988)
- 1971 - பீட் சாம்ப்ரஸ், அமெரிக்க டெனிஸ் வீரர்

### இறப்புகள்

- கிமு 30 - கிளியோபாட்ரா (பி. கிமு 69)
- 1848 -ஜோர்ஜ் ஸ்டீவன்சன், (தொடரூந்து கண்டுபிடித்தவர்) (பி. 1781)
- 1955 - தோமஸ் மான், ஜேர்மனிய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1875)
- 1955-ஜேம்ஸ் சம்னர், அமெரிக்க வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 1964-இயான் பிளெமிங், ஆங்கில இதழியலாளர், எழுத்தாளர் (பி. 1908)
- 1973 - வால்டர் ஹெஸ், சுவிஸ் மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1881)
- 1973 - கார்ள் சைக்ளெர், ஜேர்மனிய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1898)
- 1979 - ஏர்ண்ஸ்ட் போரிஸ் செயின், ஜேர்மனிய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1906)
- 1989-வில்லியம் ஷாக்லி, அமெரிக்க இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1910)
- 2005 - ரேலங்கி செல்வராஜா, இலங்கையின் தமிழ் தொலைக்காட்சி அறிவிப்பாளர் (பி. 1960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் இருப்புக்காக...!





சுபாஸ் சந்திரபோஸ்

ஒரு இனம் தனது இருப்பை, அடையாளத்தை காப்பாற்றிக் கொண்டு இப்பூமியின் உயிரின வரலாற்றில்- மானுட வரலாற்றில் இறுதிவரை தனது இயக்கத்தைப் பதிவு செய்ய ஒன்றல்ல இரண்டல்ல நூறாயிரம் போராட்டங்களை நடத்த வேண்டியிருந்தது, இருக்கிறது.

இன்று, தமிழினமாகிய நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் வாழ்வியல் உண்மையும் இதுவே.

ஒரு இனம் தன்னை நிலை நிறுத்திக்கொள்வதற்கான சவால்கள் பூமியில் இயற்கையாலும் பலசந்தர்ப்ங்களில் ஏற்படுத்துப்பட்டுள்ளது. செயற்கையாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்படுத்தப்பட்டும் வருகிறது. குறிப்பாக மனிதனின் முறையற்ற ஆட்சி, அதாவது, நீதி வழ்விய ஆட்சிபீடங்களின் முடிபுகள், அவசியமற்ற மிகக் கொடூரமான, அரக்கத்தனமான யுத்தங்களையும் கோடிக் கணக்கான உயிர் அழிவுகளையும் வளங்களின் அழிவுகளையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனாலும், இன்றுள்ள- நவீன மனிதனாலும் இதனைக் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. அதாவது உலக சமாதானத்தை மானுட சமாதான, சக வாழ்வை நிர்மாணிக்க முடியவில்லை.

எனவே, ஆள்பவர்களின் கொடுமையும் அதற்கெதிரான மக்கள் போராட்டங்களும் வரலாற்றின் நியதியாக இருந்துவருகிறது.

இந்த நியதிக்குள் தமிழ் மொழியால் அடையாளப்படுத்தப்படும் எமது இனம் அதாவது, தமிழ் இனம் காலங்காலமாக சுதந்திர முனைப்புக்கொண்டு தனது இருப்பை நிலைநிறுத்திக்கொள்ள முயன்றதான, வரலாற்றுப் புத்தகத்தின் பக்கங்கள் ஏராளம்.

தமிழரின் வரலாறு, சுவடியாக்கம் பெற்றதிலிருந்தான பக்கங்களை, ஓரளவுக்கு நாம் அறிந்துள்ளோம். இந்த வரலாறு ஆரம்பத்தில் திராவிடவரலாறாகவே பெரிதும் பேசப்பட்டிருக்கிறது.

ஆயினும் பேசப்பட்ட, தொகுக்கப்பட்ட வரலாறுகள் அதிகமானவை, ஆட்சியாளர்களின் (மன்னர்களின்) கதைகூறும் சரித்திரங்களாகவே உள்ளன.

இந்த சரித்திரங்களில் சாதாரண மக்களது உணர்வுகள், விருப்பங்கள், திறன்கள், இடம்பெறவில்லை. அவர்களின் சமூக வாழ்வியல் இயங்குதளத்தில் அவை சுழலவில்லை என்பது ஆற்ற முடியாத மனப்பாரத்தைத் கொடுக்கும் விடயம்.

ஆனால், இந்த வரலாற்றின் பக்கங்களிற்குள் வரிவடிவங்கள் பெறாமல், பக்கங்கள் இணைக்கப்படாமல், மறைக்கப்பட்ட, மறுக்கப்பட்ட ஒரு பெரும் துயரம்தோய்ந்த முற்றிலும் இருளான வரலாற்று இலக்கியம், உயிரால் இரத்தத்தால் எழுதப்பட்ட பெரும் உண்மைக்காவியம், எழுதப்பட்ட வரலாறுகளுக்கு வெளியே உள்ளது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

எம்மால், முடிந்தளவுக்கு நாம் காலச் சக்கரத்தை பின்நோக்கிச் சுழற்றி எம்மால் முடிந்தளவுக்கு அந்தச் சரித்திரத்தை கற்பனை செய்து பார்க்கவேண்டும். அப்போழுது.......இன்று, நான் அல்லது நாங்கள், அல்லது இந்த தமிழ்ச் சமுதாயத்தின், இனத்தின் இருப்புக்கான அர்த்தம் புரியும்.

எமக்கு முன்பிருந்த பல்லாயிரம் சந்ததிகளின் வியர்வைத் துளிகளின் சிதறல்கள், உப்புநீர் ஓடையாக..., உதிரத்தின் சிந்தல்கள் செந்நீர் ஆறாக..., எம்முன்னவரின் புண்ணுற்ற உடல்கள், இனப்பயிருக்கு பசளையாக... எம் முகத்தில் வாடையோ, கச்சானோ அள்ளிவீசும் புழுதியாக... எம்மோடு இன்றும் இருக்கின்றன. அவர்கள் பேசிய மொழியின் அதிர்வுகள் இன்றும் இந்த காற்றுவெளியில் எதனதோ அதிர்வில் மாற்றத்தை ஏற்படுத்தியவாறுதான்....


நிச்சயம் அது எங்களையும்... ஸ்பரிஸித்தவாறுதான்...; பிரபஞ்சம் நீளும் வரை... தொடர்கிறது.

இந்த வகையில் மறைக்கப்பட்ட தமிழின வரலாற்றின் சில பக்கங்கள் இங்கே எம்மை நாமே தெம்பூட்டுவதற்காக...

சமகாலத்தில், எமது தாய் நிலத்திற்காய் செய்யப்பட்ட எம்மவரின் தியாக சரித்திரத்திரம் கூட மறைக்கவும் மறக்கவும் வைக்கப்பட்டு- அதுபற்றி வாய்திறந்து வெளியில் பேசமுடியாத, அரசப்பயங்கரவாத அட்க்குமுறைக்குள் முடக்கப்பட்டிருக்கிறது எமது இனம்.

இச்சமயத்தில் அண்மைக்கால வரலாறான, நேதாஜி காலத்தில் அவரது சரித்திரத்தில் சம்பந்தமாகியிருந்த தமிழர்களால் உருவாக்கப்பட்ட வீரம், தியாகம் நிறைந்த மறந்துவிடப்பட்ட மறைக்கப்பட்ட வரலாற்றினை மீட்டுப்பார்க்க ஒரு சந்தர்ப்பம் இங்கே...

இந்திய விடுதலைக்காக நேதாஜி மலேயாவிலும் பர்மாவிலும் செயற்பட்டார். அவருக்கு உதவியாக அங்கிருந்த தமிழ் இன மக்கள் முழுமையாக செயல்பட்டனர்.



இந்தியா விடுதலை பெற்றால் தான், ஆசியாவில் மற்ற நாடுகளும் விரைவில் விடுதலை அடைய முடியும் என்று நம்பியவர் நேதாஜி. இந்திய விடுதலைக்கான அவரது அறைகூவல் கேட்டு தமிழ் நாட்டிலும் மலாயாவிலும் இருந்த தேசிய தமிழின மக்கள் உயிரைக் கொடுக்கவும் தயங்காமல், இந்திய தேசிய இராணுவத்தில் இணைந்து கொண்டார்கள்.

2ஆம் உலக யுத்தத்தின்போது மகாத்மா காந்தியின் அழைப்பின் பேரில் இந்தியர் பலர் பிரிட்டிஷ் படையணியில் சேர்ந்தது நினைவிருக்கலாம். அச்சமயம், நேதாஜி கட்டியமைத்திருந்த இந்திய தேசிய இராணுவம் ஜப்பானுக்கு ஆதரவாக போரிட்டது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

அரக்கான் (பின்பு மியன்மார் என அழைக்கப்பட்ட தேசம்) போரில் பல தமிழர்கள் வீர மரணம் அடைந்தனர். மடிந்த ஒவ்வொரு தமிழனும் உயிர் போகும்வரை போராடியதாக நேதாஜியிடம் சொல்லுங்கள் என்று அருகில் இருந்தவரிடம் உயிர் பிரியும் வலியோடு கூறிவிட்டு வீரமரணம் அடைந்தார்கள்.

ஒரு கால கட்டத்தில் 600 இற்கும் மேற்பட்ட இந்திய தேசிய இராணுவ வீரர்களை கைது செய்ய நேர்ந்தது. அப்போது நேதாஜி ஜெனரல் திலானை அழைத்து பின்வருமாறு கூறினார்: ... "இவர்கள் மிக சிறந்த வீரர்கள் கடுமையுடன் இறுதிவரை போராடுவார்கள். இவர்கள். தவறான புரட்சி செய்வதற்கு காரணம் இவர்களது தலைவரின் தவறான போக்குத் தான். அதனால் நீங்கள் இவர்களுக்கு தலைமை ஏற்று வழி நடத்துங்கள்" என்றாராம்.

பின் ஒரு நாள் தலைவரான திலான், "தமிழ் வீரர்களுக்கு நான் தலைவராக இருந்தது என் பெரும் பேறு. இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்று பெருமையாகக் கூறியுள்ளார்.

இந்திய தேசிய இராணுவத் தலைவராக இருந்த மற்றொரு வீரர் ஜெனரல் கியானி, "தமிழர்கள் மிக சிறந்த வீரர்கள், இறுதிவரை போரிட்டார்கள். எதிரியிடம் பிடிபட்டபோதும் இவர்கள் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்ததே இல்லை என்பதுதான் குறிப்பிடத்தக்கது" என்ற தெரிவித்திருக்கிறார்.

இத்தகைய வீரத்துடன் நேதாஜியின் புகழ் மங்காது போரிட்ட தமிழர்கள் மீது அன்றைய பிரிட்டிஷ் தலைவர் வின்சன் சர்ச்சில் மிகுந்த ஆத்திரமடையும் சூழலும் அப்போது இருந்திருக்கிறது.

நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தின் மீது எரிச்சலடைந்த வின்சன் சேர்ச்சில் ரேடியோவில் "மலேயா ரப்பர் தோட்டத்தில் ரப்பர் பால் உறுஞ்சும் தமிழர்களின் இரத்தம் நேதாஜி மூளையில் கட்டியாகவுள்ளது" என்று கூறினாராம்.

அதற்குப் பதிலளித்த நேதாஜி "இந்த தமிழர்கள்தான் பின்னாளில் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் இரத்தத்தை குடிப்பார்கள்" என்று கூறியிருந்தாராம் அந்த அளவுக்கு தமிழர்களின் பங்களிப்பு, வீரம் 2ஆம் உலக யுத்தத்தின்போது அரச தலைவர்களால் பேசப்படும் இருந்திருக்கிறது.

1945 இல் மார்ச் மாதம் நேதாஜி படையில் ஒற்றர்களாக இருந்த நான்கு தமிழ் வீரர்கள் தூக்கிலிடப்பட்டனர். இந்தியா விடுதலை பெற்ற பின்னரும் இவர்களைப் பற்றி இந்திய மக்களே அறியாதிருந்தனர் என்பது விந்தையாகும். அவர்கள் தமிழராகப் பிறந்ததனால்தான் இவரகளது புகழ் அறியப்படவில்லை என்பது வருந்தத்தக்க விடயமே.

தலைசிறந்த படைத் தலைவர்களை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் நேதாஜி 46 பேர்களைத் தேர்ந் தெடுத்தார். அவர்களை ஜப்பானின் தலைநகரான டோக்கியோவிற்கு அனுப்பி இராணுவப் பயிற்சி கொடுக்க விரும்பினார். அவ்வாறுபயிற்சி பெற்றுத் திரும்பியவர்களில் 16 பேர்கள் தமிழர்கள். அவர்களில் ஒருவர் ஈழத் தமிழர் ஆவார்.

இந்திய தேசிய இராணுவத்தில் சேர ஆர்வம் கொண்டு ஒரே நேரத்தில் 2500 பேர் அணிதிரண்டனர். உடல்வலிமை இல்லாதவர்களும் கூட தங்களை இணைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்தினர். 14 வயது சிறார்களும் 16 வயது என்று பொய் கூறிக்கொண்டு இந்திய தேசிய இராணுவத்தில் இணைந்தனர்.

ஒருவர் தன்னிடம் இருந்த 200 பசுக்களை நன்கொடையாக இந்திய தேசிய இராணுவத்துக்கு நேதாஜியிடம் கொடுத்துள்ளார். கிழிந்த சேலையுடன் வந்த மூதாட்டி ஒருவர் தன்னிடம் இருந்த மூன்று டாலரைக் கொடுத்துள்ளார். அதைக் கண்ணீர் மல்க நேதாஜி பெற்றுக்கொண்டார்.

நேதாஜியைச் சுற்றி பல தமிழர்கள் இருந்தனர். அவருடைய சடையல்காரர் பெயர் காளி. நேதாஜியின் இறுதி கடிதத்தை எழுதியவர் திவி என்ற தமிழர். நேதாஜி சிங்கப்பூருக்கு வந்த போது அவரை வரவேற்றவர் சிதம்பரம் என்ற ஒரு தமிழர்.

ஜேர்மனியில் தமிழ் வானொலி நடத்தியவர் திரு நாயுடு. அவர் அக்காலத்தில் பிரான்சில் உள்ள பாரிசில் உணவு விடுதி ஒன்றை நடத்திய பெரிய வியாபாரி. நேதாஜியின் விருப்பத்திற்கு ஏற்ப உணவு விடுதியை மூடிவிட்டு ஜேர்மனியை அடைந்து தமிழ் நிகழ்ச்சிகளை நடத்தினார். குண்டு மழை பொழிந்த போதும் கூட தொடர்ந்து தமிழ் நிகழ்ச்சிகள் நடத்தினார். நாலரை ஆண்டுகளில் ஒரேயொரு நாள்தான் நிகழ்ச்சி நடக்கவில்லையாம்.

மலோயாவிலும் நேதாஜிக்கு ஆதரவாக யுவபாரதம், சுதந்திர இந்துஸ்தான் போன்ற தமிழ் இதழ்கள் வெளிவந்தன.

இராணி ஜான்சி, படையின் தலைவியாக கேப்டன் இலட்சுமி இருந்தார். இந்த படையில் கேப்டன் ஜானகி தேவர் பெரும்பங்கு ஆற்றினார். இவர் இந்தியாவில் பிறக்காதவர். இந்தியாவை பார்க்காதவர். எனினும் வீரத்தமிழ் இன உணர்வோடு போராடினார்.

விவசாய குடும்பங்களில் இருந்து வந்த இளம் பெண்கள் தங்கள் நீண்ட கூந்தலை கத்தரித்துவிட்டு இராணுவ பயிற்சிக்குப் பின் பர்மா போர் முனைக்கு சென்றனர். அங்கு அவர்கள் செவிலியர்களாக பணி புரிய மறுத்து துப்பாக்கி ஏந்தி ஆங்கிலேயருடன் போரிட விரும்பினார்கள்.

இன்று ஈழத்தில் வரலாறு படைத்த பெண்களுக்கு முன்னுதாரணமாக இத்தகைய விராங்கனைகள் அன்றும் தமிழினத்தில் இருந்திருக்கிறார்கள் என்பது தமிழர் வரலாற்றுக்கு பெருமை சேர்ப்பதாகும்.

தொகுப்பு-சாருகன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை

## கொழும்பு, றோயல் கல்லூரி முன்னோடிப் பரீட்சை - 2013

## கணக்கீடு - II

(நேற்றைய தொடர்ச்சி...)

6. அ. கம்பனியொன்றின் ஊழியர்களான ஜனனி, டிலானி ஆகியோர்களின் 2012ம் ஆண்டு ஜுன்மாத வேதன விபரம் வருமாறு

(i) கடமை புரிந்த மணித்தியாலங்கள்

| ஊழியர பெயர் | வேலையாற்றிய மணித்தியாலயங்கள் |
|---|---|
| ஜனனி | 170 |
| டிலானி | 164 |

**மேலதிக தகவல்**

(i) ஊழியர்கள் நாளொன்றுக்கு 8 மணித்தியாலப்படி வாரத்தில் 5 நாட்கள் வேலை செய்தல் வேண்டும். மாதமொன்றுக்கான வேலை நாட்கள் 20 ஆகும்.

(ii) மணித்தியாலமொன்றுக்கான கூலியாக ரூ 300/= செலுத்தப்படுவதுடன் மேலதிக வேலை நேரங்களுக்கான கொடுப்பனவு சாதாரண நேரக் கூலியில் 1 ½ மடங்காகும்.

(iii) ஜனனியும் டிலானியும் கடன் அறவீடாக ஒவ்வொரு மாதமும் முறையே ரூ 2000, ரூ 3000 செலுத்துவர்.

(iv) ஊழியர் சேமலாபநிதி (EPF), ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) என்பவற்றுக்கான பங்களிப்பு சாதாரண கூலியில் முறையே

- ஊழியர் 10% வீதம் (EPF)
- நிறுவனம் 15% வீதம் (EPF)
- நிறுவனம் 3% வீதம் (ETF)

மேலதிக நேர கூலி EPE & ETF கணிப்பீட்டிற்கு கருத்திற் கொள்ளப்படமாட்டாது,

**தேவைப்படுவது**

1. ஜுன் மாதத்திற்கான சம்பளப்பட்டியல் பொருத்தமான பகுப்பாய்வு நிரல்களுடன் தயாரிக்க.
2. ஜுன் மாதத்திற்கான கீழ்வரும் பேரேட்டு கணக்குகள்
- சம்பளமும் கூலியும் கணக்கு
- சம்பளமும் கூலியும் கட்டுப்பாட்டு கணக்கு, நிதிய கணக்கு ஊழியர் சேமலாபம்

ஆ. சரசு மெனுபெக்சரர்ஸ் இலத்திரனியல் உபகரணங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாகும். நிறுவனம் 2 உற்பத்தி பிரிவுகளையும் 1 சேவை பிரிவையும் தன்னுள் கொண்டுள்ளது. ஜனவரி மாதத்திற்கு மதிப்பிடப்பட்ட மேந்தலை செலவுகள் வருமாறு

| மதிப்பிடப்பட்ட மேந்தலை செலவுகள் | ரூ(000) களில் |
|---|---|
| வாடகையும் வரியும் | 21 |
| நேரில் கூலி | 220 |
| இயந்திர காப்புறுதிக்கட்டணம் | 22 |
| இயந்திர எரிபொருளும் சக்தியும் | 105 |
| வெளிச்சம் | 63 |
| ஊழியர் நலன்புரி செலவு | 44 |

ஏனைய தகவல்

| | உற்பத்தி பிரிவு | | சேவைபிரிவு |
|---|---|---|---|
| ஊழியர் எண்ணிக்கை | 10 | 10 | 02 |
| இயந்திரங்களின் ஏட்டுப் பெறுமதி ரூ 000 | 1400 | 800 | - |
| இயந்திர இயங்கு மணித்தியாலங்கள் | 2000 | 1500 | - |
| இட பரப்பு – சதுர அடிகளில் | 100 | 100 | 100 |

சேவைப் பிரிவின் மொத்த மேந்தலைச் செலவு உற்பத்திப் பிரிவுகளுக்கிடையில் இயந்திர இயங்கு மணித்தியாலப்படி பகிரப்படல் வேண்டும்.

**தேவைப்படுவது**

1. மதிப்பிடப்பட்ட மேந்தலை செலவுகளை உற்பத்தி சேவைப் பிரிவுகளுக்கிடையில் பகிரும் மேந்தலை பகிர்வு அட்டவணை

2. சேவைப்பிரிவின் மேந்தலை செலவினை மீள உற்பத்தி பிரிவுகளுக் கிடையில் பங்கீடு செய்யும் அட்டவணை

7. அ. பின்வரும் தகவல்கள் பைலட் பொது கம்பனி லிமிடெட்டின் நிதிக்கூற்றுக்களிலிருந்து 31 மார்ச் 2012 இல் பிரித்தெடுக்கப்பட்டவை

| வருமான கூற்று தரவுகள் | ரூ (000) |
|---|---|
| விற்பனைகள் | 3 200 |
| விற்பனை கிரயம் 01.04.2011 இல் (இருப்பு ரூ 300) | 2 400 |
| வருமான வரி | 150 |
| வரிக்கு பின் இலாபம் | 300 |

31 மார்ச் 2012 இல் உள்ளவாறான ஐந்தொகை மீதிகள் ரூ (000) உரிமைத்துவம்

| | | | |
|---|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் | 500 | நடைமுறையல்லா சொத்து | 1 500 |
| பகிராத இலாபம் | 300 | நடைமுறைசொத்து | |
| நடைமுறையல்லா பொறுப்பு | | இறுதி தொக்கு | 500 |
| 15% தொகுதிகடன் | 400 | கடன்படுனர் | 300 |
| நடைமுறை கடன் | 300 | காசும் வங்கி | 150 |

**தேவைப்படுவது**

நீர் கீழ்வரும் வீதங்களை கணிப்பிடுக.

i. கையிருப்பு புரள்வு விகிதம்
ii. நடைமுறை விகிதம்
iii. கடன் உரிமை விகிதம்
iv. வட்டி காப்பு விகிதம்
v. சொத்து புரள்வு விகிதம்

ஆ. ஈஷ்ட், வெஸ்ட் பொதுகம்பனி நவீன பிரதி புண்ணும் இயந்திர மொன்றை ரூ 300000 இற்கு கொள்வனவு செய்வது தொடர்பாக இரு வேறுபட்ட இயந்திரங்கள் ஆராயப்பட்டன. இவ்விரு இயந்திரங்களிலுமிருந்து எதிர்பார்க்கப்படும் இலாபங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | இயந்திரம் வகை (A) | இயந்திரம் வகை (B) |
|---|---|---|
| 01 | ரூ 25 000 | ரூ 25 000 |
| 02 | 35 000 | 50 000 |
| 03 | 65 000 | 80 000 |
| 04 | 10 000 | 40 000 |
| 05 | (10 000) | 20 000 |

**மேலதிக தகவல்கள்**

(i) இயந்திரம் வகை (A) யின் எஞ்சிய பெறுமானம் ரூ 30000 இயந்திரம் வகை (B) யிற்கு எஞ்சிய பெறுமானமில்லை.

(ii) இயந்திரங்கள் நேர்கோட்டு முறையில் 5 ஆண்டுகளுக்கு பெறுமான தேய்வு தாக்கல் செய்யப்படும்.

(iii) மூலதன கிரயம் ஆண்டுக்கு 12% சதவீதமென கொண்டு கழிவிடப்பட்ட காரணி வீதம்

| ஆண்டு | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| கழிவுகாரணி | 1.0 | 0.9 | 0.8 | 0.7 | 0.6 | 0.5 |

**தேவைப்படுவது**

1. ஒவ்வொரு ஆண்டிற்குமான காசு பாய்ச்சல்களை கணிக்க.
2. ஒவ்வொரு இயந்திரத்தினதும் முதலீடு மீளப்பெறும் காலம் (Pay back period) கணிக்க.
3. ஒவ்வொரு இயந்திரத்தினதும் தேறிய நிகழ்கால பெறுமதி (Net Present Value) ஐ கணிக்க.
4. இவ்விரு இயந்திரங்களிலும் கொள்வனவு செய்வதற்கு எது சிறந்ததென காரணத்துடன் குறிப்பிடுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் நாம் எப்போதும் பின்னிற்கப்போவதில்லை

## ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல்



**தமிழ்மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி சுயலாப அரசியலை நடத்திச் செல்ல முனை பவர்களை எம்மத்தியில் இருந்து அகற்ற உறுதிகொள்வோம் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்துள்ளார்.**

அனலைதீவு மணிகண்டான் சனசமூக நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தீவக மக்களின் அபிவிருத்தி மற்றும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எப்போதும் பின்னிற்பதில்லை. அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் தீவுப்பகுதி விரைவாக அபிவிருத்தியடைந்து வருகிறது என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

அவ்வாறே யாழ்.மாவட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை உடனடியாகப்பூர்த்தி செய்துவருகின்றோம். வரட்சி மிகுந்த தீவகப் பிரதேசங்களில் நிலவும் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நிலாவரையில் இருந்து அராலி பிரதேசத்திற்கு குடிநீரை வழங்கும் செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமெனபணித்துள்ளேன். இதனுடன் தீவகத்திலுள்ள குளங்கள் புனரமைப்புச் செய்யப்படுவதுடன் நீர்த்தாங்கிகளும் அமைக்கப்படவுள்ளன.

தமிழ் மக்களாகிய நாம் இருப்பவற்றைப் பாதுகாத்துக் கொண்டு இல்லாதவற்றை பெற்றுக் கொள்ளப் போகின்றோமா? அல்லது இருப் பவற்றையும் இழக்கப்போகின்றோமா? என்ற தீர்மானத்தை நாம் எடுக்க வேண்டிய நிலை தற்போதுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஜோதிலிங்க இரதபவனி

காசி விஸ்வநாதர்-வடமராட்சி
திக்கம் வடிசாலை வீதி வழியே
காலை 8.00-மாலை 4.00
மடத்துவாசல் பிள்ளையார் கோயில்
மாலை 5.00-இரவு
அல்வாய் முத்துமாரி அம்மன் கோயில்
இளைஞர் நிகழ்வு மாலை 6.00-7.30
ஸ்ரீ சோமநாதர் -வலிகாமம்
காலை 7.00-மாலை 4.30
பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில்
மாலை 7.00-இரவு
அராலி சிந்தாமணிப் பிள்ளையார் கோயில்
இளைஞர் நிகழ்வு
மாலை 6.00-7.30
இராமேஸ்வரம்-கிளிநொச்சி/ தென்மராட்சி
காலை 10.00-மதியம் 1.00
சோரன்பற்று நெல்லிப்பள்ளம் அம்மன் கோயில்
மாலை 4.00-இரவு
தர்மர்கேணி அம்மன் கோயில்

# வெலிவேரிய சம்பவம் நவிப்பிள்ளையின் காதுக்கு

(கொழும்பு)

வெலிவேரியவில் அண்மையில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பேச்சாளர் சிசிலி புயோலி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது. இச் சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்திருந்தனர்.

சுத்தமான குடிநீரை வழங்க வேண்டுமெனக் கோரி போராட்டம் நடத்திய மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் குறித்து தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நவநீதம்பிள்ளை இம் மாதத்துக்குள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் என இதுவரையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை உத்தியோக பூர்வமாக அறிவிக்க வில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது .(அ-2)

# சுன்னாக சந்தியில் பேருந்து விபத்து

## மயிரிழையில் உயிர் தப்பிய சிறுவன்

சுன்னாகம் பேருந்து நிலையப் பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் சிறுவன் ஒருவன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளான்.

இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று சுன்னாகம் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட நிலையில் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக இருந்த வர்த்தக நிலையம் ஒன்றுடன் மோதியதிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 5.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,



சம்பவதினம் சுன்னாகம் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட பேருந்து காங்கேசன்துறை வீதியை இணைக்கும் சுப்பிரமணியம் வீதியில் புக முற்பட்ட போது கட்டுப் பாட்டை இழந்து வேகமாக வீதியோரமாக சென்றுள்ளது. இதன்போது வீதியால் பயணித்த சிறுவன் பேருந் தின் கட்டுப்பாடு இழந்த நிலையை உணர்ந்து பாதுகாப்பாக நின்றுள்ளான்.

எனினும் அப்பேருந்து வீதியின் திசைக்கு திரும்பமுடியாது எதிரே வீதியோரமாக இருந்த வர்த்தக நிலையத்தை மோதித்தள்ளியுள் ளது.

இவ்விபத்தில் பேருந்தின் முன் பகுதி சேதமடைந்ததுடன் வர்த்தக நிலையமும் பலத்த சேதத்திற்குள்ளானது. குறித்த வர்த்தக நிலையம் சம்பவ தினத்தன்று மூடப்பட்டிருந்தமையால் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

அசம்பாவிதம் தொடர்பில் வர்த்தக நிலைய உரிமையாளருக்கும் பேருந்தின் சாரதிக்கும் இடையில் இடம்பெற்ற உடன்பாட்டையடுத்து பேருந்து குறித்த இடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. (அ-5)

# 1000 ரூபாவுக்காக அடிபட்ட பொலிஸார்

(கொழும்பு)

கருவலகஸ்வெவ பொலிஸ் நிலைய சோதனைச்சாவடி ஒன்றில் மோதலில் ஈடுபட்ட பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம் மோதல் சம்பவம் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்டுள்ளது.

ஆயிரம் ரூபா பணத்தால் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலில் முடிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மோதல் நடந்தவேளை இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் மது போதையில் இருந்ததாகவும் தெரியவந்துள்ளது. சோதனைச் சாவடியில் இருந்த ஏனைய பொலிஸார் மோதலைத் தடுத்து காயமடைந்த இருவரையும் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். குறித்த பகுதி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# இந்தியா இலங்கையின்மீது அழுத்தங்களை பிரயோகிக்கும்

## இந்திய அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிப்பு

வடக்கு மாகாணசபைத் தேர்தல் மற்றும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடு என்பன அண்மித்து வரும் சந்தர்ப்பத்தில் இந்தியா இலங்கைக்கு எதிரான தனது அழுத்தங்களை அதிகரிக்க தயாராகி வருகிறது.

இந்தியா இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என வலியுறுத்தி இந்திய அரசியல் கட்சிகள் அண்மையில் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

வடக்கு மாகாண சபை தேர்தல் மற்றும் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நெருங்கி வரும் நேரத்தில் இந்தியாவில் இந்த ஆர்ப்பாட்டங்கள் மேலும் அதிகரிக்கலாம் என இந்திய அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

எதிர்காலத்தில் இலங்கைக்கு எதிராக இந்தியா கடும் நிலைப்பாடுகளைக் கடைப்பிடிக்க நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் அடுத்து வரும் வருடங்களில் பொதுத் தேர்தல் நடை பெறவுள்ள நிலையில் இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் கடும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதால் இந்திய மத்திய அரசின் அழுத்தம் இலங்கைக்கு எதிராக மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் தெரிய வருகிறது. (அ-2)



தேசிய விளையாட்டுத்துறை திணைக்களம், வடமாகாண விளையாட்டுத்துறை திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் 9 மாகாணங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப்போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோர் விளையாட்டு வீரர்களுக்கு கைலாகு கொடுப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய சூழலி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை சமயச் சொற்பொழிவு, கலைநிகழ்வுகள் என்பன உற்சவ காலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி அனந்தலெட்சுமி மாணிக்கராஜசர்மாவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில் நந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுகள் ... வுகளாக பிரம்ம... அருள் உரை ... ளுடனான செ... றவுள்ளது.

கலை நிகழ்... தெல்லிப்பழை ... வெட்டி காமா... சிவலோகப... அறநெறிப்... கள் வழங்...

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் புல்லாங்குழல் இ... திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்த ஆதீன ... மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப்புல்லாங்குழல் இசைக்கச்சேரியை சகோதரிச... வழங்கவுள் ளனர்.

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு உற்சவ காலத்தில் தினமும் மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தின் முதலாம் நாளான இன்று தெல்லிப்பழை துர்க்கா இல்ல மாணவிகளின் இறை வணக்கத்துடன் ஆரம்பமாகும் இவ் இசையரங்கிற்கான ஆசியுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திரு முருக...

மங்கல இ... இதில் நாதஸ்வர கலைஞர்களா... வி.கே.பஞ்சமூர்த்தி, வி.கே.பி. குமரன் ஆகியோரும் தவில் கலைஞர்களாக ஆ.நர்மதன், என்.பிரசன்னா ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டுசைவத் ...ழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரை கலை நிகழ்வு,மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்புநிகழ்வுகள் மஹோற்சவ காலங்களில் தினமும் மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவத்தமிழ் பண்பாட்டுக்கழக பணிப்பாளர் வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை.எம்.பி அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளை நடராசா பரமேஸ் வரி மண்டப ஸ்தாபகர் சிவத்திரு நடராசா சத்தியரூபன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இதன்படி இன்று திங்கட்கிழமை மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தம் வழங்கும் ''மஹோற்சவம்'' எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ சிறப்பு உற்சவ தினங்களின் நிகழ்வுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பண்பலை வானொலியின் மூலம் நேரடியாக ஒலிபரப்பப்படவுள்ளது.

இதன்படி இன்றைய தினம் திங்கட்கிழமை நடைபெறும் கொடியேற்றத் திருவிழா தொடர்ந்து மஞ்சத் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தோற்சவம், பூங்காவனம் ஆகிய சிறப்பு உற்சவ நாள் நிகழ்வுகளே மேற்படி வானொலியின் ஒலிபரப்பு சேவையில் நேரடி ஒலிபரப்பு செய்யப்படவுள்ளது.

இவ் ஒலிபரப்பின் நேர்முக வர்ணனையை மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் வழங்க யாழ். ஒலிபரப்பு சேவை இணைப்பாளர் கஜன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கவுள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்த...மி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு இளம் சமுகத்தினரிடையே இந்துசமய விழுமியங்களையும் கலாசாரத்தையும் பண்பாட்டையும் வளர்க்கும் நோக்கில் யாழ்ப்பாணம் சின்மயா மிஷனால் முன்னெடுக்கப்படும் *இந்துவாக வாழுவோம்* எனும் செயற்றிட்டம் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இச்செயற்றிட்டம் ஆறு பிரிவுகளாக முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்படி உற்சவகாலத்தில் வடமாகாண கல்வித்திணைக்கள ஆதரவுடன் தினமும் காலை உள் வீதி வலம்வரும் போது யாழ். மாவட்டத்தை சேர்ந்த பாடசாலை மாணவர்கள் ,ஆசிரியர்களினால் திருமுறை நாமசங்கீர்த்தனம் திருப்புகழ் பஜனை என்பவை பாடப்படவுள்ளன. தொடர்ந்து மாலை நேர உற்சவ வெளிவீதி வலம்வருதலின் போது நல்லூர் பிரதேச செயலகமற்றும் நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் சமூக நலனோம்பு அபிவிருத்தி ஒன்றியம் ஆகியவ ற்றின் ஆதரவுடன் யாழ். பல்கலை க்கழக இராமநாதன் நுண்கலைப் பீட மாணவர்களும் நல்லூர் பிர தேச இந்து ஆலயங்களின் அற நெறிப் பாடசாலை மாணவர்களும் அடியார்களும் இணைந்து வழங்கும் பாடல்களும் இடம்பெறவுள்ளன. (அ-5)

# நாட்டின் சட்ட திட்டத்திற்கு அமையவே இந்திய மீனவர்களுக்கு நடவடிக்கை

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே இந்திய மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களுக்கு எதிராக நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக் கப்படும்.

இந்திய மீனவர்களை விடுதலை செய்ய உட னடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சு, இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகரிடம் கோரியிருந்தது.

இந்தியா இராஜதந்திர ரீதியாக உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசத்தை அழைத்து இந்தக் கோரிக்கை விடுத்திருந்ததுடன் அழுத்தத்தையும் பிரயோகித்திருந்தது.

எவ்வாறாயினும் இந்திய மீனவர்களை விடுதலை செய்வது தொடர்பில் விசேட சலுகைகளை கடைப் பிடிக்க முடியாது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. உள்நாட்டு சட்டங்களை அமுல் படுத்துவதில் நெகிழ்வுத் தன்மையை பின்பற்ற முடியாது. மேலும் உள்நாட்டு சட்ட திட்டங்களுக்கு அமையவே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# நல்லையப...

கோனவன் உலகை ஆளும் கொற்றவன் ஆசி நல்க
கூன் பிறை நுதலினாளும் கூடியே குதூகலிக்க
கண்கொளா அழகனந்த கனக மாமயில் மீதேறி
அண்ணனை வணங்கி நின்று
ஆசிகள் அனைத்தும் பெற்று கண்கவர் நல்லை வந்து
கொற்றமா கோவில் புக்கான் வண்ணமார் தமிழர் மண்ணில்
வனப்புற தமிழர் ஆட்சி ஓங்க எண்ணரும் புகழினோடும்
எழில் நிறை ஆட்சி கிட்ட வெண்ணிறக் கொடியதேறி
வினைகளைக் களையுதும்மா

விகடகவி

# கொடியேற்றம் காண்பதற்கு!



ஆடி அமாவாசை யடுத்து வரு ஆறாம் நாளில்
ஆவலுடன் அடியார்கள் அமைதியொடு
நாடியே வருகின்றார் நாற்றிசை யிருந்தும்
நல்லூரில் கொடியேற்றம் காண்பதற்கு
பாடியே பக்திப் பரவசத்தில் பணிகின்றார்
பூமாலை பாமாலைப் பொலிவுடனே
மூடிவரு வேதனைகள் முற்றாய் வாடிடவே
முருகாவுன் திருவருளை வேண்டுகின்றார்

க. அருமைநாயகம், (குளப்பிட்டி)

# கைதொழ நின்றோம் பழுதின்றி காப்பாய்

தொழுது தூமலர் தூவித் துதிப்போர்
துயரது நீங்கத் தோகைவாகனனே கொடியேறு
அழுது காமுற்ற அரற்றுகின்றார் தம்
அல்லல்கள் தீர ஆறுமுகனே கொடியேறு
பொழுது போக்கிப் புறக்கணிப் போரையும்
புனித பாதையின் ஒருங்கிடக் கொடியேறு
விழுதுபோ லைமது கலாசாரம் ஓங்கிட
விநாயகன் இளைய வாகனே கொடியேறு
வழுவின்றி நாளும் வரிசையொடு வாழ
வரமது தந்தருளும் வடிவேலா கொடியேறு
களமது நல்லூர் பகுதியின் வாசா
கைதொழ நின்றோம் பழுதின்றிக் காப்பாய்

கலாபூஷணம் மு.தணிகாசலம், (கற்கோவளம்)


# நல்லைக் கந்தன் கொடியேற்றம்

வடிவேலன் திரு வீதி திரளான
அடியார் சூழ மயிலேறி சேவற்
கொடியாடும் கோபுரமும் நீள் மதிலும்
கடம்பு, கமுகு மிக்கு வளர் சோலை
படிமீது பரவுவார் படுதுன்பம்
கெட அருளும் நல்லைப் பதி வாழும்
வடிவான அலங்கார கந்தன்
இடவலமாய் வள்ளி தெய்வயானை
உடனாக திருக்கையில் கெடு சூரன்
உடல் கிழித்த வேல் தாங்கி
இடிபோல அரோகரா கோஷமுடன்
முழவோடு பல்லியங்கள் அதிர
கொடியேற்ற விழாக் கண்டார்
உலகில் கண்ணின் பயன் கொண்டார்.



சு.சிவராசா, (நாவற்குழி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ரங்கத்தில் ... பலியாகினர்

...கத்தில் ஏற்பட்டவிபத்தில் 30 ...க்கி பலியாகியுள்ளதாக அஞ்சப்படு ... உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.



ஒரிசா மாநிலம் ரூர்கேலாவில் இருந்து 150 கி.மீ. தொலைவில் குல்டா வசுந்தரா என்ற கனிம சுரங்கம் உள்ளது.இதில் ஏராள மான தொழிலாளர்கள் நேற்று முன்தினம் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

திறந்தவெளி சுரங்கமான இதில், மண் வெட்டி எடுக்கப்பட்ட இடத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய இடைவெளி காரணமாக திடீரென மண் சரிவு ஏற்பட்டது.

இதுகுறித்து உயிர் தப்பிய பாரதி பாரிகா (வயது 20) என்ற யுவதி கூறுகையில்,

மண் சரிவுக்கு சற்று அருகில் தான் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். திடீரென பூகம்பம் ஏற்பட்டது போல மிகப் பெரிய மண் குன்று சரிந்து மூடுவதை கண்டு அலறி ஓடினேன். அதிர்ஷ்டவசமாக தப்பினேன் என்று கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

மாவட்ட கலெக்டர்கள் சம்பவ இடத்துக்கு சென்று மீட்புப் பணிகளை முடுக்கி விட்டனர்.இராட்சத இயந்திரங்களைப் பயன்படுத்தி சரிந்த மண்ணை அகற்றி வருகின்றனர். சுமார் 30 பேர் வரை மண்ணில் புதைந்து பலியாகி இருக்கலாம் என்று தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து மீட்பு பணி நடைபெற்று வருகின்றது. (அ-2)

# பாகிஸ்தான் செல்கிறார் ஐ.நா.பொது செயலாளர்

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கி-மூன் இரு நாள் பயணமாக நாளை பாகிஸ்தான் பயணமாகிறார்

. நாளை மறுதினம் புதன் கிழமை நடைபெறும் பாகிஸ்தான் சுதந்திர தின விழாவில் பங்கேற்கும் அவர், பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, பிரதமர் நவாஸ் ஷெரீப், பாராளுமன்ற சபாநாயகர் சர்தார் அயாஸ் சாதிக் ஆகியோரை சந் தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதன்போது பாகிஸ்தானில் போலியோ நோயை முற்றிலுமாக ஒழிப்பது, கல்வி மேம்பாடு, குறிப்பாக பெண்கள்கல்விமேம்பாடு போன்றவை தொடர்பாக அந்நாட்டின் தலைவர்களுடன் அவர் விவாதிப்பார்.

உலகளாவிய ரீதியில் போலியோ நோய் ஒழிக்கப்பட்டு பல ஆண்டுகளாகியும் நைஜீரியா, ஆப்கானிஸ்



தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் மட்டுமே இன்றளவும் பலர் போலியோ நோய்க்கு பலியாகி வருகின்றனர்.

எனவே, உரிய சொட்டு மருந்து முகாம்களை நடத்தி பாகிஸ்தானில் போலியோ மரணங்களுக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என பான் கி-மூன் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# அகதிகள் பொது இடங்களில் நடமாட தடைவிதிப்பு

சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள நகர் ஒன்றில் தேவலாயங்கள், சந்தை, நீச்சல் குளம் உள்ளிட்ட பொது இடங்களில் அகதிகள் நடமாட தடை விதிக்கப்பட்டுள்ளதால் அங்கு பெரும் பரபரப்பு எழுந்துள்ளது.

சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஏராளமான இலங்கை தமிழர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர். நாட்டின் மேற்கு ஜூரிச் நகரின் அருகே அமைந்துள்ளது பெர்ம்கார்ட்டன் நகரம் இங்கு கடந்த மாதம் சுவிட்சர்லாந்தில் புதிதாக தஞ்சம் அடையும் அதிகளுக்கான முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த நகரின் நிர்வாகம் சமீபத்தில் பரபரப்பு உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது. அதில் அகதிகள் முகாமில் தங்கியிருப்பவர்கள் தேவாலயங்கள் நூலகம், நீச்சல் குளம், பாடசாலை மைதானம் உள்ளிட்ட 32 பொது இடங்களில் நடமாட கூடாது என்று அறிவித்துள்ளது.

இது குறித்து நகர மேயர் ரோமான் டெல்லன்பாக் வானொலிக்கு அளித்த பேட்டியில், பொது இடங்களில் அகதிகள் நடமாடும் போது, அவர்கள் மீது இனரீதியான தாக்குதல் நடக்கவும் போதைப் பொருள் பழக்கம் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

அவர்களுக்கு சகல இடங்களிலும் பாதுகாப்பு அளிப்பது இயலாது. எனவேதான் அதிகளைப் பொது இடங்களில் நடமாட வேண்டாம் என்று தடை விதித்துள்ளோம் என்றார்.

எனினும் இந் நிர்வாகத்தின் தடை உத்தரவுக்கு மனித உரிமை அமைப்புக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இது இன ரீதியான பாரபட்சம் நிறைந்த நடவடிக்கை என்றும், மனித உரிமைகளுக்கு எதிரானது என்றும் குற்றம் சாட்டியுள்ளனர். (அ-2)


# அல்கொய்தா அமைப்பின் பிராந்திய பிரிவுகளால் அபாயம் தோன்றியுள்ளது

அல்கொய்தா அமைப்பின் பிராந்திய பிரிவுகளால் குறிப்பிடத்தக்க அபாயம் தோன்றியுள்ளதாக அமெரிக்க அதிபர் ஒபாமா கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் கூறியதாவது,

அல்கொய்தா அமைப்பின் தலைமைக் கட்டமைப்பு அழிக்கப்பட்டுவிட்டது. ஆனால், அதன் சில பிரிவு களைச் சேர்ந்தவர்களும், மற்றைய பயங்கரவாதிகளும் பிராந்தியக் குழுக்களாக உருவெடுத்துள்ளனர். இவர்களால் குறிப்பிடத்தக்க அபாயம் தோன்றியுள்ளது.

நியூயோர்க் இரட்டை கோபுரங்கள் மீது நடத்தப்பட்டது போன்ற பெரும் தாக்கு தல்களை அக்குழுக்களால் நடத்தமுடியாது எனினும் வெளி நாடுகளில் உள்ள நமது தூதரகங்களைத் தாக்கும் திறன் அவற்றிடம் உள்ளன. நமது பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும், வல்லமையும் அவற்றுக்கு உண்டு.



பாதுகாப்பு ஏற்பாடுகள் பலவீனமாக உள்ள நாடுகளில் ஸ்திரத்தன்மையைக் குலைக்கவும், இடையூறு ஏற்படுத்தவும் அவர்களால் இயலும்.

எனினும், நன்றாகக் கட்டமைக்கப்பட்ட அல்கொய்தா அமைப்பை அழிப்பதில் குறிப்பிடத்தகுந்த வெற்றியைப் பெற்றுள்ளோம். அந்த அமைப்பு மிகவும் பலவீனமாக உள்ளது. அதற்குப் பெரிதாக இயங்கும் திறன் இப்போது இல்லை. ஏ.க்யூ.ஏ.பி. போன்ற அதன் பிராந்தியப் பிரிவுகளால் ஒரு லொறி முழுவதும் வெடிகுண்டுகளை நிரப்பிச் சென்று நமது தூதரக அலுவலகங்கள் மீது மோதி சிலரைக் கொல்லும் திறன் இருக்கலாம்.

எனவே, நாம் தொடர்ந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

நம்மால் பயங்கரவாதத்தை முற்றிலும் ஒழிக்க இயலாது., அதை வலுவிழக்கச் செய்யவும், மற்ற நாடுகளுடன், நமது தோழமையை வலுப்படுத்தி குறித்த சம்பவங்களை இந்த அமைப்புகளால் மீண்டும் நடத்த முடியாதபடி செய்ய நம்மால் முடியும்.

ரஷ்யாவுடனான உறவுகளைப் பொறுத்தவரை, சந்திப்புகள் மற்றும் பேச்சுகளைத் தற்காலிகமாக நிறுத்திவைத்து, உறவுகளை மறுமதிப்பீடு செய்வதே பொருத்தமானதாக இருக்கும். எனினும், ரஷ்யாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை நமது வீரர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று கூறப்படுவதை நான் ஆதரிக்கவில்லை என்றார். (அ-2)

# இந்தோ.வில் எரிமலை வெடித்து அறுவர் பலி



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் எரிமலை வெடித்ததில் கடற்கரையில் நடந்து சென்று கொண்டிருந்த சிறுவர்கள் உட்பட 6 பேர் கருகி பலியாகினர்.

இதில் வசித்து வந்த 3ஆயி ரம் பேர் பாதுகாப்பாக வெளியேற்றப் பட்டுள்ளனர்.

இந்தோனேசியாவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது நூசா டெங்காரா மாகாணம். இம் மாகாணத்தின் பலாவூ தீவின்மைய பகுதியில் ரொகடென்டா எரிமலை உள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம முதல் குறித்த எரிமலை குமுறிக் கொண்டிருந்தது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் எதிர்பாராத விதமாக அதன் நெருப்புக் குழம்புகள் வெடித்து சிதறின. எரிமலையில் இருந்து நெருப்பு கற்கள் சிதறியதில் அருகில் இருந்த கடற்கரை கிராமமான ரோகிரோலேவில் தீ விபத்து ஏற்பட்டது. இதில் கடற்கரை பகுதியில் இருந்த 2 குழந்தைகள் உட்பட 6 பேரை நெருப்பு கற்கள் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே அவர்கள் உடல்கருகி பலியாகினர்.

இது தொடர்பாக தகவல் அறிந்த மீட்பு படையினர் சம்பவ இடத்துக்கு சென்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எரிமலையை சுற்றியுள்ள 3 கிலோமீற்றர் தொலைவுக்கு மக்கள் நடமாட தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியா எரிமலைகள் நிறைந்த தீவுகள் கொண்ட நாடாகும். இங்கு 129 எரிமலைகள் குமுறிக் கொண்டிருக்கின்றன. அதில் ஒன்றான ரொகடென்டாதான் நேற்று முன் தினம் வெடித்து சிதறியது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பூட்டானுக்கு பொருளாதார உதவிகள் வழங்க நடவடிக்கை

## இந்தியா உறுதியளிப்பு



பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள பூட்டானுக்கு இந்தியா அனைத்து வழிகளிலும் உதவிசெய்யும் என தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

பூட்டானுக்கு மூன்று நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மற்றும் வெளியுறவுத் துறைச செயலர் சுஜாதா சிங் ஆகியோர் பூட்டான் பிரதமர் ஷெரிங்டாப்கேவை நேற்றுமுன்தினம் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது, "இந்தியாவினால் முடிந்த அனைத்து உதவிகளும் பூட்டானுக்கு அளிக்கப்படும். அந்த அரசுடன் இணைந்து பணியாற்ற இந்தியா விரும்புகிறது எனவும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இந் நாட்டை அதிலிருந்து மீண்டு வருவதற்குத் தேவையான உதவி அளிக்கப்படும்" என்றும் மேனன் கூறியதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்நாட்டின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள ஷெரிங்குக்கு இதன் போது மேனன் வாழ்த்து தெரிவித்தார். அங்குவெற்றிகரமாக ஜனநாயக ரீதியில் ஆட்சி மாறியதை மேனன் பாராட்டினார்

11ஆவது ஐந்தாண்டுத் திட்டத் தில் பூட்டானுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங், ஷெரிங்குக்கு கடிதம் எழுதியிருந்தார். இதற்காக தான் நன்றிக் கடன்பட்டுள்ளதாகவும் ஷெரிங் கூறினார்.

பூட்டானின் தற்போதைய பொருளாதார நிலையை மேம்படுத்த 11ஆவது ஐந்தாண்டு திட்டம் போது மானது அல்ல. எனவே, பொருளா தார ஊக்குவிப்பு எனும் புதிய திட்டத்தை ஷெரிங் அறிமுகப்படுத் தியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதி இழந்தனம்; பாலனை இழந்தனம்; படைத்த
நிதி இழந்தனம்; இனி நமக்கு உரியதெனும்
கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்
– அரிச்சந்திர புராணம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லூர்க் கந்தனின் கொடியேற்றத்தில் எங்கள் இளைஞர்களுக்கு ஓர் அறைகூவல்

நல்லூர்க் கந்தப்பெருமானுக்கு இன்று கொடியேற்றம். நல்லூர்க் கந்தனின் கொடி ஏற்றத்துடன் யாழ்ப்பாண மண் புனிதம் அடையும். அந்தளவுக்கு எங்கும் பக்திநிலை ஓங்கி நிற்பதைக் காணமுடியும்.

கந்தப் பெருமானின் மஹோற்சவ காலத்தில் அதிகாலைப் பொழுதில் அங்கப்பிரதிஷ்டை செய்யும் இளைஞர்களின் அரோகரா ஒலியில் தான் கதிரவன் விழித்தெழுவான்.

அந்தளவிற்கு நல்லூர்த் திருவீதியில் எங்கள் இளைஞர்களின் அரோகரா ஒலி பேரிகையாக முழங்கும். அந்த அற்புதக் காட்சியை காண் போர் நல்லூர்க் கந்தப் பெருமான் புரியும் ஆட்சியின் மகிமையை உள்ளூர உணர்வர்.

இதுதவிர திருமுறைப் பாராயணம், காவடி, கரகாட்டம், கற்பூரச் சட்டி என எங்கும் ஒரே பக்திமயம்.

இவ்வாறு நல்லூர்த் திருவீதி எங்கும் தெய் வீகம் பொலிந்து நிற்கும்.

அத்தகைய சிறப்பை மேலும் பாது காக்கின்ற பெரும் பொறுப்பு ஒவ்வொரு இளை ஞனுக்கும் உரியதாகும்.

இன, மத பேதம் கடந்து; நாடு, தேசம் என்ற எல்லை கடந்து; உலகம் முழுவதையும் தன்பால் ஈர்க்கின்ற நல்லூர்க் கந்தப்பெருமானின் மஹோற்சவக் காலங்களில் எங்கும் எதிலும் புனிதம் – தெய்வீகம் என்பதை நிலைநிறுத்து வதில் இளம் சமூகம் முன்வரவேண்டும்.

எங்கள் பண்பாட்டின் அடித்தளம் நல்லூர்க் கந்தப் பெருமானின் மஹோற்சவத்திலேயே வெளிப்படுகிறது.

எனவே இளைஞர்கள், இந்து சமய கலா சாரத்திற்கு அமைவாக ஆடை அணிந்து, ஆசா ரத்துடன் ஆலயத்திற்கு வருவது அவசியமாகும்.

போராட்ட சூழலில் நாங்கள் பலவற்றை இழந்துள்ளோம். அந்த இழப்பில் உறவுகளும் ஓடித்திரிந்த வாழ்விடங்களும் காலாகாலமாக சேர்த்துவைத்த செல்வங்களும் அடங்கும்.

ஆனாலும் நாங்கள் எங்கள் பண்பாட்டை, எங்கள் வழிபாட்டை, சுய கௌரவத்தை இழக்க வில்லை என்பதை நிரூபித்தாக வேண்டும்.

இந்த நிரூபணம் இலங்கையை யார் வேண்டு மானாலும் ஆளலாம், ஆனால் எங்கள் தலைவன் – தமிழ் மன்னன் நல்லூர்க் கந்தன் என்பதை மார்தட்டிச் சொல்கின்ற அளவில் எங்கள் இளைஞர்களின் ஒழுங்கும் ஒழுக்கமும் நல்லூர்ப் பதியில் பளிச்சிடட்டும்.

எனது அருமை இளைஞர்களே! நல்லூர்த் திருவிழா, தமிழினத்தின் பெருவிழா என்பதை நீங்கள் உணர்ந்து கொண்டால் நல்லூர் மஹோற்சவம் மிகச் சிறப்பாக – பக்தி பூர்வமாக நடந்தேறியது என்று வாயாரப்புகழும் அளவிற்கு நீங்கள் நடந்து கொள்ளவேண்டும்.

நீங்கள் நினைத்தால் எங்கள் மண்ணில் நடக்கின்ற இப் பெருவிழாவில், எந்தவிதமான கபளீகரத்திற்கும் இடம்கொடுக்காமல் தடுக்க முடியும். இது உங்கள் விழா. நீங்கள் உங்களை ஒழுங்குபடுத்தினால் மற்றையவர்கள் தங்கள்ள நிச்சயம் மாற்றிக் கொள்வர்.

இந்த உண்மையை உணர்ந்து செயற்படுங் கள். நிச்சயம் நல்லூர் கந்தன் எங்களுக்கு விடிவைத்தருவான்.

# மீண்டும் தலை எடுக்கிறது சட்டவிரோத மதுவிற்பனை

(மிருசுவில்)

மிருசுவில் வடக்கு, கொடிகாமம், தவசிக்குளம் போன்ற பிரதேசங் களில் சட்டவிரோத மது விற்பனை மீண்டும் தலை தூக்கியுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான சட்டவிரோத மது விற் பனையால் சிறுவர்கள் முதல் பெரிய வர்கள் வரை மதுவுக்கு அடிமையாகி வருகின்றனர்.

இதனால் இளைய சமுதாயம் பாதிக் கப்பட்டு வருவதாக கவலை வெளியி டப்பட்டுள்ளது.

அத்துடன், மது பாவனையினால் வீடுகளிலும் வீதிகளிலும் சண்டை சச்சரவுகள் அதிகரித்துள்ளன.

இப்பிரச்சினை தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு முன்னர் அறிவிக் கப்பட்டதையடுத்து, சட்டவிரோத மது விற்பனை ஒழிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் தற்போது, மீண்டும் அப்பகுதிகளில் சட்டவிரோத மது பாவனை அதிகரித்துள்ளதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டு மென பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9-85)

## அம்மா பகவானின் 59ஆவது ஜென்ம தினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ கல்கி பகவான் பகவதி அம்மாவின் 59 ஆவது ஜென்ம தின நிகழ்வு எதிர்வரும் 15-ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மிக பிரார்த் தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு இணையத்தளம் மூலம் பக்தர் களுக்கு நேரடி தரிசனம் இடம்பெறவுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## மடுமாதா திருத்தலத்திற்கான புகையிரத சேவை இன்று

(மன்னார்)

மன்னார் மடுமாதா திருத்தலத்தின் ஆவணிமாத திருவிழாவை முன் னிட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபையுடன் ஒன்றிணைந்த விசேட புகையிரத சேவைகளை முன்னெடுப் பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட புகையிரத சேவைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக புகையிரத போக்குவரத்து அத்தியட்ச கர் எல்.ஏ.ஆர்.ரத்னாயக்ககூறியுள்ளார்.

இன்றும் நாளையும் நாளை மறு தினமும் மொரட்டுவை, அளுத்கம, கொழும்பு, கோட்டை, நீர்கொழும்பு ஆகிய புகையிரத நிலையங்களிலிரு ந்து புகையிரத சேவைகள் ஆரம் பிக்கப்படவுள்ளன.

குறித்த புகையிரதங்களில் மடு வீதி புகையிரத நிலையம் வரை பக்தர்கள் பயணிக்க முடியும் என புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மடுவீதி புகையிரத நிலையத்திலி ருந்து மடு மாதா திருத்தலம் வரை இலங்கை போக்குவரத்து சபையின் ஒத்துழைப்புடன் விசேட பேருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள் ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள் ளது.

திருவிழாவில் பங்கேற்று சொந்த இடங்களுக்கு திரும்பும் பக்தர்களின் நலன்கருதி எதிர்வரும் 15, 16ஆம் திக திகளில் விசேட புகையிரத, பேருந்து ஒருங்கிணைந்த சேவைகளை முன் னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

### சுதந்திரக் கட்சிக்கு எதிராக அதிக முறைப்பாடுகள்

# தேர்தல் சட்டங்களை மீறுவோர் தண்டிக்கப்படுவர் - மைத்திரிபால

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் களுக்கு எதிராகவே அதிகளவான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படும் வேட்பாளர்களுக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்க கட்சி தீர்மானித்துள்ளது.

சட்டங்களை மீறும் வேட்பாளர்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்து கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரி பால சிறிசேன கடிதம் அனுப்பிவைத் துள்ளார்.

வேட்பாளர்கள் சட்ட ரீதியாக குற்ற வாளியாக அறிவிக்கப்பட்டால் சட்ட ரீதியான தண்டனைகளுக்கு புறம்பாக மாகாண சபைகளில் ஐந்தாண்டு களுக்கு பதவி வகிக்க முடியாத நிலைமை ஏற்படும். எனவே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும்போது சட்ட விதிகளுக்கு மதிப்பளித்து செயற்படுமாறு அதில் உத்தரவிடப்பட்டுள்ளது. (செ-1)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

11.08.2013க்கான **வினாவும் விடையும்:-**

**வினா:-** பஞ்சகிருத்தியம் (ஐந்தொழில்) குறிக்கும் சடங்கு எது? அது எவ்வாறு எமது வாழ்வோடு தொடர்புடையது?

**விடை:** மஹோற்சவம், நான் இதுவரை கடைப்பிடிக்காத நல்ல பண்பை இன்றிலிருந்து (உண்மைபேசுதல், அதிகாலை எழும்புதல், சைவ உணவு உண்ணுதல்...) கடைப்பிடிப்பேன் என்று கொடியேற்றத்தன்று உறுதிபூண்டு (படைத்தல்); தொடர்ந்துவரும் நாட்களில் அந்தப் பண்பை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி (காத்தல்); தேர் உற்சவத்தின்போது அப்பண்புக்கு எதிரான தீயபழக்கத்தை அழித்து தீர்த்த உற்சவத்தின் போது இறைவன் அருளாக என்னுடைய அந்தப் பண்பை எனது சொந்தப் பண்பாக மாற்றி, மௌன உற்சவத்தில் இருந்து அந்த நல்ல பண்பை எனக்குள்ளேயே மறைத்து வாழுதல்.

12.08.2013: **வினா:-** "நான் ஒரு இந்து சமயி" என்னும் தகுதியை எனக்குத் தருவது எது?

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) மாலை 4 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

**சின்மயா மிஷன்**
**யாழ்ப்பாணம்**

**இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,**
**நல்லூர்.**

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

# கணவன்- மனைவி உறவு



மனித மனம் ஒரு வியப்பானது.ஒரு பொருளை விரும்பினால், அதனை அடையாத முன்னம் அதனிடம் பல நன்மைகளையும் மேன்மைகளையும் கற்பித்துக்கொண்டு இன்புறுவது, அதை அடைந்த பின்னர் அதில் குறைகளைக் கற்பித்துக்கொண்டு சோர் வடைவது. இது விரிந்த நோக்கம் இல்லாதவர்களிடம் இயல்பாக இருக்கும். இந்தக் குறைக்கு நீங்கள் ஆளாகவேண்டாம். நல்லதையும் உயர்வையும் பாராட்டுங்கள். குறைகளை நுட்பமானமுறையில் எடுத்து விளக்கவும் நிறைவு செய்யவும் முயலுங்கள். வாழ்வு வளம் பெறும்.

கணவனை மனைவியும் மனைவியைக் கணவனும் சிறப்புக் காணுமிடத்தும் உயர்வைக் கண்டும் பாராட்டவேண்டியது அவசியம். இது அன்பையும் நட்பையும் பெருக்கும், உறுதிப்படுத்தும். இதனால், எப்போதுமே பாராட்டிக்கொண்டு இருக்கவேண்டுமென்பதில்லை. அப்படிச்செய்தால் அது முகத்துதியாக மதிப்புக் குறையும்.

ஒரு சில குடும்பத்தில் கணவனோ, மனைவியோ பலரால் பாராட்டப்படுபவராயும், புகழப்படுபவராயும் இருக்கலாம். ஊர் பாராட்டுவதைப்போல் தன் வாழ்க்கைத்துணைவரும் பாராட்டவேண்டும் என எதிர்பார்ப்பார்கள். இங்கு மிக நுணுக்கமான உண்மை அடங்கியிருக்கிறது. வாழ்க்கைத் துணைவரை ஊர்புகழும்போது அந்தப் புகழ்ச்சியில்தான் மகிழ்வுற்றுத் திளைத்திருப்பார்கள். அது அவருக்கு உரிய சொத்தாகி விடுகிறது.


ஆதலால், தானும் புகழவேண்டுமென்பது அர்த்தமற்றதாகிவிடுகிறது. இந்த உண்மையை உணராதவர்கள் தன் வாழ்க்கைத் துணைவர் புகழவில்லையே என்று ஏக்கமும் வருத்தமும் அடைவார்கள். இது தேவையற்ற எண்ணம். ஊர் புகழும்போது மனைவியோ, கணவனோ புகழவில்லையே என்ற குறை எவரும் ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது. அலட்சியம் செய்ததாக எடுத்துக்கொள்வதும் நல்லதன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்க கோரிக்கை

**முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த 1950ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நெட்டாங்கண்டல் வைத்திய சாலையில் நிரந்தர வைத்தியர் மற்றும் தாதியர்கள் இல்லாமையால் நோயாளர்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.**

கடந்த 2009ஆம் ஆண்டு மேற்குறித்த பிரதேச செயலர் பிரிவில் உள்ள 71 கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 2 ஆயிரத்து 694 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் நிரந்தர வைத்தியர் இன்மையால் பல மைல் தூரங்களில உள்ள மாங்குளம் மற்றும் மல்லாவி வைத்திய சாலைகளுக்கு பணம், நேரம் என்பவற்றை செலவு செய்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. நெட்டாங்கண்டல், செல்வபுரம், கரும்புள்ளியான், சிவபுரம், வன்னி விளாங்குளம், அம்பாள்புரம், கொல்ல விளாங்குளம், ஒட்டறுத்தகுளம், பாலிநகா, பூவரசன்குளம், பாண்டியன் குளம, மூன்றுமுறிப்பு, விநாயக புரம், பொன்நகர், சிராட்டிகுளம் ஆகிய கிராமசேவையாளர் பிரிவிலுள்ள மக்கள் மேற்குறித்த வைத்தியசாலைக்கே சிகிச்சைக்காக செல்கின்றனர். இவ்வைத்தியசாலையல் தினமும் 70 இற்கும் மேற்பட்ட வெளி நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதுடன் 25 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் தங்கி நின்று சிகிச்சை பெறுகின்றனர். கடந்த 2012ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டு கடந்த ஜூலை மாதம் இடமாற்றம் பெற்று மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். தற்போது மல்லாவி ஆதார வைத்தியசாலை வைத்தியரே இவ் வைத்தியசாலைக்கு வந்து ஒரு மணிநேரம் பதில் கடமை புரிந்து வருகின்றார். முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தின் அடிப்படைத் தேவைகள் தொடர்ச்சியாக நிவர்த்தி செய்யப்படாத நிலையும் மாந்தை கிழக்கு பிரதேசத்தினை புறக்கணிக்கும் நிலையும் தொடர்ந்து காணப்



படுவதாகவும் வீதிப்புனரமைப்பு, மின்சார விநியோகம், உத்தியோகத்தர்கள் தங்குவதற்கான விடுதிகள், சீரான போக்குவரத்து வசதிகள் என்பன இல்லாமையால் பல்வேறு சிரமங்களை மாந்தை கிழக்கு மக்கள் சந்தித்து வருகின்றனர்.

எனவே நிரந்தர வைத்தியர் மற்றும் தாதியர்களை நியமித்து உதவுமாறு நோயாளிகள் துறை சார்ந்த அதிகாரிகளிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-250-266-267)

## இறுவெட்டு வெளியீடு

சு.வரதகுமாரின் இயக்கத்தில் தயாரிக்கப்படவுள்ள பூவிழி டொட்கொம் என்ற திரைப்படத்தின் பாடல் தொகுப்புக்களின் இறுவெட்டு வெளியீடு எதிர்வரும் 16 ஆம் திகதி வவுனியாவில் இடம் பெறவுள்ளது.

ஏ.வி.ஆர். மூவியின் தயாரிப்பில் வெளிவரவுள்ள இத் திரைப்படம் தீபாவளியன்று இந்தியாவின் வட பழனியிலுள்ள திரையரங்கொன்றில் வெளியிடப்படவுள்ளது.

இப் படத்திற்கான இசையை இசையமைப்பாளர் கந்தப்பு ஜெயந்தன் வழங்கியுள்ளார். (ம-266)




## முற்பணம் செலுத்தி விதை நெல்லை பெறலாம்

(பூநகரி)

பூநகரி கமநல சேவை நிலையத்தில் முற்பணம் செலுத்தி காலபோக விதைப்புக்கான நெல்லை பெற்றுக் கொள்ள முடியும் என கமநல சேவை நிலைய தலைவர் கா.யோகராசா அறிவித்துள்ளார். பூநகரி பிரதேசத்தில் காலபோக விதைப்பு அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் விதை நெல்லுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. கடந்த ஆண்டு பருவம் தப்பிய மழையால் 50வீத நெற் பயிர்கள் அழிவடைந்ததுடன் அறுவடை செய்யப்பட்ட நெல்களும் முளைவிட்டமையாலேயே இம்முறை விதை நெல்லுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இம்முறை 6ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நெற் காணிகளில் கால போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-84)

## புனரமைக்கப்படாத வீதியால் பயணிப்போர் அசௌகரியம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு- ஒட்டுசுட்டான் வீதி 30வருடமாக புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் பல கஷ்டங்களை எதிர் கொள்கின்றனர். புனரமைக்கப்படாத 20 கி.மீ நீளமான இவ் வீதியாலேயே ஒட்டுசுட்டான், வவுனியா, மாங்குளம் ஆகிய இடங்களுக்கு செல்வோர் பயணம் செய்கின்றனர்.

தினமும் ஆயிரத்திற்கு மேற்பட்ட பயணிகள் இவ்வீதியால் பயணம் செய்கின்றனர். குன்றும் குழியுமாக உள்ள இவ் வீதியால் பயணம் செய்வோர் விபத்துக்



களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. போக்குவரத்திற்கு உகந்ததாக மேற்குறித்த வீதியை புனரமைத்து தரவேண்டும் என்பதே அப் பகுதி மக்களினதும் பயணிகளினதும் வேண்டுகோளாகும். (ம-267)

## கட்டாக்காலி மாடுகளால் அழிவை எதிர்கொள்ளும் விவசாயிகள்

(பூநகரி)

குடமுறுட்டி குள நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் 300 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைக்கு தயாராக இருக்கின்ற போது கட்டாக்காலி மாடுகளால் பெரும் அழிவை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் விவசாயிக ளால் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகளுக்கு யாரும் உரிமை கோரவில்லை. இம்மாடுகள் உரிமை கோரப்படாத பட்சத்தில் ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் என




அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக உரியவர்களிடம் பல தடவை முறைப்பாடு செய்தும் எது விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. துறைசார்ந்த அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த வேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-84)

## மின்சாரத்தை வழங்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

சிலாவத்தை பொதுச்சந்தைக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர். முல்லை தெற்கு, சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு, தெற்கு, உப்புமாவெளி ஆகிய கிராம மக்கள் இப் பொதுச் சந்தையை பயன்படுத்துகின்றனர். எனவே மேற்குறித்த சந்தைக்கு மின்சாரத்தை வழங்கி உதவுமாறும் வியாபாரிகளும் நுகர்வோரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-267)





கிளிநொச்சி ஏ-9 வீதி நகரப் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் இராஜகோபுர வாசல் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது... (படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 10 ஆயிரம் மீ. ஓட்டம்; மோ பரா சாதனை




மோ பாரா என்று அழைக்கப்படும் முகமது பாரா சோமாலியாவில் பிறந்து இங்கிலாந்தில் வாழ்ந்துவருபவர். இவர் ஒரு சிறந்த தடகள வீரர். கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 5,000மீ ஓட்டப்பந்தயத்தில் தங்கமும், 10,000மீ பந்தயத்தில் வெள்ளியும் பெற்றார். சென்ற வருடம் லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 5,000 மற்றும் 10,000மீ ஓட்டப்பந்தயத்தில் இவர் முதலிடம் பெற்றார்.

தற்போது மாஸ்கோவில் தொடங்கியுள்ள உலக சம்பியன்ஷிப் போட்டியில் இவர் 10,000மீ ஓட்டத்தில் 27 நிமிடம், 21.71 வினாடிகளில் கடந்து முதலிடம் பெற்றுள்ளார். சென்ற முறை இவரைத் தோற்கடித்து தங்கப் பதக்கம் வென்ற எதியோப்பியாவின் ஜெய்லன் இந்த முறை 27 நிமிடம், 22.23 வினாடிகளில் முடித்ததால் இரண்டாவது இடத்தையே பெறமுடிந்தது. கென்யாவின் பால் டானி மூன்றாவது இடத்தைப் பெற்றார்.

இந்த வெற்றி மூலம் உலக சம்பியன்ஷிப்பின் முதல் நாள் தங்களின் முதல் பதக்கத்தை இங்கிலாந்து அணியினர் பெற்றுள்ளனர். இதற்கான பயிற்சி மிகவும் கடுமையாக இருந்தபோதும் அது தனக்கு வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளதாக மோ பாரா குறிப்பிட்டுள்ளார்.

# காற்பந்து உலக கிண்ணம்; கட்டாரில் நடத்துவதில் சிக்கல்

கட்டாரில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள உலகக் கிண்ண காற்பந்து போட்டிகள் இடம்பெறுவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

உலகக் கிண்ண காற்பந்து பேர்ட்டிகள் எதிர்வரும் 2022ஆம் ஆண்டு கட்டாரில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் போட்டிகள் நடைபெறும் காலம் கோடைக் காலமென்பதால் குறித்த போட்டிகளை நடத்துவது சாத்தியமற்றது என கால்பந்து சங்கத் தலைவர் க்ரெக் டைக் அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த காலப்பகுதிக்கு ஏற்றவாறு போட்டிகளை நடாத்த தயார் என கட்டார் உலகக் கிண்ண காற்பந்து போட்டிகளுக்கான ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

எனினும் அரங்குகள் முழுவதும் குளிரூட்டப்பட்டு காணப்பட்டாலும் , ரசிகர்களுக்கான வசதிகள் போதுமானதாக அமையாது என க்ரெக் டைக் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து போட்டிகள் இடபெறுவதற்கான திகதிகளில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




இலங்கைத் திருநாட்டில் வளம் கொழிக்கும் யாழ்.
மண்ணில் விவசாய புரட்சி ஒன்றினை ஏற்படுத்தி
தன்நிறைவு பொருளாதார நிலையினை
உயர்த்துவதற்கு இலங்கை சுதந்திரக் கட்சியின்
விவசாய சம்மேளன தலைவராக திகழ்கின்ற
கௌரவ **ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ**
அவர்களுடன் யாழ் மாவட்ட பிரதான
அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின்
ஏற்பாட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற் தி
ட்டத்தில் பயன்பெறும் பொருட்டு யாழ் மாவட்ட
விவசாய சம்மேளன தலைவர், செயலர்,
பொருளாளர் மற்றும் அங்கத்தவர்கள் அனைவரும்
அங்கஜனின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
அலுவலகம் அமைந்துள்ள இல. 80A, கோவில்
வீதி, நல்லூரில் அமைந்துள்ள அலுவலகத்தில்
தொடர்பு கொள்ளவும்.

**அங்கஜன் இராமநாதன்**
யாழ் மாவட்ட அமைப்பாளர்
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

(C-4294)


# பள்ளிவாசல் தாக்குதலை பிக்குமாரே வழிநடத்தினர்

கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்திய குழுவினரை பௌத்த பிக்குமார் வழி நடத்தியுள்ளமை கண்காணிப்புக் கமராக்களில் பதிவாகியுள்ள படங்கள் மூலம் தெரியவந்துள்ளதாக ஆங்கில இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

தாக்குதல் நடத்தியவர்கள், அருகில் இருக்கும் முஸ்லிம்களின் வீடுகள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு பிக்குகள தலைமையில் சென்ற குழுவினர் பள்ளிவாசல் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தியதைக் காணக் கூடியதாக இருந்தது.

இதனையடுத்து முஸ்லிம் சிலர் சிங்களவர்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மேற்படி பள்ளிவாசலை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என சிங்கள ராவய அமைப்பு உள்ளிட்ட பௌத்த அமைப்புகள் கோரிக்கை விடுத்து வந்தன.

இதேவேளை,கொழும்பு, கிராண்ட்பாஸ் மோலவத்தை பள்ளிவாசலை அந்த இடத்திலிருந்து எந்த காரணம் கொண்டும் அகற்ற கூடாது என்று சிறிலங்கா தவ்ஹீத் ஜமாத் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது,

பள்ளிவாசல் தாக்குதலுக்கு எதிராக முஸ்லிம் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்டனங்களை வெளியிட வேண்டும். இதனை அவர்கள் செய்யாது போனால், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அமைச்சர்களுக்கு எதிராக நாம் போராட வேண்டிய நிலை உருவா கும்.

மாலைவேளை, மஃரிப் தொழுகை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பெரும்பான்மை மக்களில் ஒரு குழுவினரும் பௌத்த பிக்குகள் சிலரும் இணைந்து பள்ளியைத் தாக்குவதற்காக திரண்டனர்.

மஃரிப் தொழுகை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பள்ளியைத் தாக்க ஆரம்பித்தவர்கள் பள்ளிவாசல் முழுவதையும் சேதப்படுத்தியுள்ளனர்.

பள்ளியை காவிக் காடையர்கள் தாக்கிக் கொண்டிருக்கும்போது பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதுமட்டுமன்றி பள்ளி முழுவதுமாகத் தாக்கப்படும் வரை அவர்கள் எந்தவிதமான எதிர் நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இதனால் பள்ளிவாசலின் அனைத்துக் கண்ணாடிகளும் உடைக்கப்ப்ட்டுள்ளன. பள்ளியின் வாயிற் கதவு அகற்றப்பட்டு அருகில் இருந்து அழுக்கு ஓடைக்குள் வீசியெறியப்பட்டுள்ளது. பள்ளியை தொடர்ச்சியாக உடைத்து நாசமாக்கும் முயற்சியில் குறித்த குழுவினர் ஈடுபட்டனர்.

அங்கு கூடியிருந்த அக்குழுவினரை பொலிசார் வெளியேற்றாமல் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு சென்ற தவ் ஹீத் ஜமாத் நிர்வாகிகள் உடனடியாக அவர்களை கைது செய்து பள்ளியின் இடத்தை விட்டு அப்புறப் படுத்துமாறு பொலிசாரிடம் வேண்டிக் கொண்டார்கள். இருப்பினும் பொலிசார் அவர்களைக் கைது செய்யவோ அல்லது அந்த இடத்தில் இருந்து வெளியேற்றவோ முயற்சிக்கவில்லை.

ஆனால் பள்ளியை உடைக்க வந்த காடையர்களை வெளியேற்றுவதை விடுத்து பள்ளியை பாதுகாப்பதற்காக அங்கு கூடிய முஸ்லிம்களை எப்படியாவது வெளியேற்றி விட வேண்டும் என்பதில் பொலிஸார் கண்ணும் கருத்தாக இருந்தனர்.

பல தடவை தவ்ஹீத் ஜமாத் நிர்வாகிகளை கலைந்து செல்லுமாறு கோரி பொலிஸார் பேச்சுவார்தை நடத்தினர்.

இருப்பி னும், பள்ளியை உடைக்க வந்தவர்கள் கலைந்து செல்லும் வரை நாம் கலைய மாட்டோம் என்றும் எங்கள் உயிரைக் கூட இதற்காக இழப்பதற்குத் தயாராக இருக்கின்றோம் என்றும் அனைத்து முஸ்லிம்களும் ஒருமித்து குரல் கொடுத்தனர்.

இந்த தாக்குதல் பின்னணியில் சிங்கள ராவய இருக்கின்றதோ எனவும் எமது சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மேலும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க சம்பவத்தை பெரிதும் படுத்தும் வகையில் காட்டமான வார்த்தைகளைப் பிரயோகித்துள் ளார். இன உறவை பாதிக்கும் வகையில் காட்டமான வார்த்தைகளை பிரயோகிப்பதை அமைச்சர் சம்பிக்க உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் சிறிலங்கா தவ்ஹீத் ஜமாத் கோரிக்கை விடுத்துள்ளது. (செ-4)

# இலவச கருத்தரங்கு

கற்கோவளம் வறாத்துவளையில் இயங்கும் வள்ளுவன் அக்கடமியில் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு இன்று பி.ப. 4 மணி முதல் பி.ப.6 மணிவரை நடைபெறவுள்ளது.

அன்பழகன் ஆசிரியரினால் வழங்கப்படும் இக்கருத்தரங்கில் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் அனைத்து மாணவர்களையும் பங்குபற்றிப் பயனடையுமாறு அக்கடமி நிர்வாகம் கேட்டுள்ளது. (செ-4)

# பள்ளிவாசல் தாக்குதல்...

இதனிடையே முஸ்லிம் அரசியல் தலைவர்கள், முஸ்லிம் மதப் பிரதிநிதிகள் போன்றோர் பௌத்த சாசன அமைச்சகத்தில் இவ் விவகாரம் தொடர்பில் விவாதித்து வரு கின்றனர்.

அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, ரிசாட் பதியுதீன், துணை அமைச்சர் ஃபைசர் முஸ்தஃபா போன்றோர் சம்பவ இடத்தைச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

**அமெரிக்க தூதரகம் கண்டனம்**

பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவத்தை இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் கண்டித்துள்ளது.

இலங்கையில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக அண்மைக்காலமாக பல தாக்குதல்கள் நடந்துவருவது கவலை அளிக்கிறது என அமெரிக்க தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

வழிபாட்டு இடங்கள் தாக்குதல் இலக்காக்கப்படக்கூடாது என்றும் அனைத்து தரப்பும் அமைதி காக்க வேண்டும் என்றும் அது கூறியுள்ளது.

வன்முறைக்கு காரணமானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், மத அடிப்படையிலான வன்முறை முடிவுக்கு வர வேண்டும் என்றும் இல ங்கை மக்களின் மத சுதந்திரம் பாதுகாக் கப்பட வேண்டும் என்றும் அது கேட்டுக் கொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த கலவரத்தில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர். பள்ளிவாசலும் பல வீடுகளும் சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**புதிய பள்ளிவாசல் மூடப்படும்**
**பழைய பள்ளிவாசல் திருத்தப்படும**

புதிய பள்ளிவாசல் மூடப்பட்டு பழைய பள்ளிவாசலை உடைக்கும் நகர அபிவிருத்தி சபையின் திட்டம் கைவிடப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது

பௌத்த சாசனம் மற்றும் மதவிவகார அமைச்சில் முஸ்லிம் அமைச்சர்கள் உள்ளிட்ட அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

பழைய பள்ளிவாசலை அகற்றுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை ஏற்கெனவே எடுத்திருந்த தீர்மானத்தை ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முடிவு எட்டப்பட்டுள்ளது.

பழைய பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள போதி மரத்தை (அரச மரம்) அகற்றிவிட்டு அந்த இடத்தை பள்ளிவாசலுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நேற்று மாலை ஊடகங்களுக்கு அரசின் முடிவை அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறினார்.

அரச செலவில் பழைய பள்ளிவாசலை புனர்நிர்மாணம் செய்வதற்கு அமைச்சர்கள் இணக்கம் தெரிவித்ததாக பேச்சுவார்த்தையில் பங்கெடுத்திருந்த சிறிலங்கா முஸ்லிம் கவுன்சில் தலைவர் என்.எம். அமீன் தெரி வித்தார்.

இதேவேளை, கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தொடர்பான பேச்சுவார்த்தை முஸ்லிம்களுக்கு முழுத் திருப்தியளிப்பதாக இருக்கவில்லை என்று மேல்மாகாண சபை ஆளுநர் அலவி மௌலானா கூறியுள்ளார். (செ-4)

# நாவற்குழி...

இரவு 9 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது.இதனையடுத்து அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்ததோடு பெரும் பரபரப்பும் நிலவியது.

இதனையடுத்து நேற்று குறித்த விகாரைப் பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசு வெற்றிபெற்...

காப்பு வலயங்களை அரசாங்கம் விடுவிக்காது. இதற்கு காரணம் காணி, பொலிஸ் அதிகாரங்களை கூட்டமைப்பிடம் கொடுத்தால் மீண்டுமொரு ஆயுத மோதல் இடம்பெறுவிடும் என்ற அச்ச நிலை உள்ளதாகவும் எனவே உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் மக்கள் குடியேற்றப்படவேண்டுமானால் அரசாங்கம் வெற்றிபெற வேண்டும் என தெரிவித்தனர்.

அத்தோடு இந்த பத்திகையாளா சந்திப்பில் கலந்து கொண்ட வேட்பாளர்களில் பெரும்பான்மையினர் இணக்க அரசியல் மூலம் தான் எமது உரிமைகளைப் பெறமுடியும் எனவும் வலியுறுத்தியிருந்தனர்.

இதன்போது ஊடகவிலாளர்கள் வேட்பாளர்களிடம் இராணுவத்தினரால் வடக்கில் மேற்கொள்ளப் பட்டுவரும் காணி சுவீகரிப்பு நடவடிகையை தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்படுமா? விவசாய நிலங்கள் அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படுமா? அவுஸதிரேலியாவிற்கு படகு மூலம் தமிழ் மக்கள் செல்வதற்கு காரணம் இங்கு பாதுகாப்பு இல்லை எனக் கூறப்படுகின்றது.

இதற்கு அரசாங்கம் தான் பொறுப்புக் கூறவேண்டும். அத்தோடு யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியிலும் சட்ட விரோதமான கைது நடவடிக்கைகளும் முன்னாள் போராளிகளின் மீது சித்திரவதைகளும் தொடர்ந்து இடம்பெறுகின்றது எனப் பல கேள்விகள் எழுப்பப்பட்டதோடு வலி வடக்கில் மீள்குடியேற்றம் அரசாங்கம் வெற்றிபெற்றால் தான் இடம் பெறுமா?

அரசாங்கம் தேர்தலில் தோல்வியுற்றால் அந்தப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தெருவில் தான் நிற்க வேண்டுமா? எனவும் கேள்வி எழுப்பினர்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு வேட்பாளர்கள்பதிலளித்த போதும் ஒரு சில கேள்விகளுக்கான பதில்களில் ஊடகவியலாள்உடன்படாத காரணத்தால் வேட்பாளங்களுக் கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையில கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. (செ-6)

## தமிழர்களின் காணி...

குடியேற்றப்பட்டு இதுவரை காலமும் எவ்வித உதவிகள் இன்றியுமே வாழ்ந்து வருகின்றனர். அரச அதிகாரிகள் உட்பட எவரும் எம்மை வந்து பார்ப்பதில்லையெனவும் இவ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் நேற்று மதியம், 1800 ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலிருந்து பரம்பரையாக விவசாயம் செய்து வரும் தமது பூர்வீக விவசாய நிலமாக தற்போது எரிந்த காடுகளாக காட்சியளிக்கும் அகந்த முறிப்பு எனும் இடத்திற்குச் சென்று நிலத்தை பண்படுத்தி உழும் முயற்சியில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அங்கு வந்த சிங்கள மக்களும், மகாவலி திட்டத்திறகு உரியவர்கள் என தம்மை இனங்காட்டியவர்களும் இது எமது நிலம். நீங்கள் இதில் விவசாயம் செய்ய முடியாது. இந்த நிலம் மகாவலித் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. ஆகையினால் உடனடியாக இவ்விடத்தினை விட்டு வெளியேற்றுங்கள்.

வெளியேறாதுவிட்டால் பொலிஸாரினை துணைக்கு அழைத்து வெளியேற்றி விடுவோம் என கொக்குத்தொடுவாய் மக்களினை சிங்கள மக்கள் எச்சரித்துள்ளனர்.

இதனால் இரு இன மக்களிற்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட சிங்கள மக்கள் விவசாயம் செய்ய வந்த தமிழ் மக்களினை பலவந்தமாக வெளியேற்றியுள்ளனர்.

மேலும் தாம் கொக்குத்தொடுவாய் மத்தியினைச் சேர்ந்த விவசாய அமைப்பினூடாகத்தான் அங்கு விவசாயம் செய்ய சென்றதாகவும் எம்மைப்போல் சுமார் 600 வரையிலான குடும்பங்களின் விவசாய நிலங்களினை சிங்களவர்கள் கைப்பற்றி வைத்துள்ளனர். இதனால் எமது வாழ்வு கேள்விக்குறியாகத்தான் உள்ளது என இம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

35 ஏக்கர் அளவிலான விவசாய நிலம் இவ்வாறு சிங்கள மக்களினால் கையகப் படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (செ-4,267)

## முஸ்லிம் அமைச்சர்கள் அரசிடம் வலியுறுத்தல்


கிராண்ட்பாஸ் பள்ளிவாசல்மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் அரசிலுள்ள அனைத்து முஸ்லிம் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர்கள் கூட்டாக இணைந்து கண்டனம் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் குறித்து முஸ்லிம் அமைச்சர்கள், பிரதியமைச்சர் நேற்று சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம் பௌசியின இல்லத்தில் விசேட சந்திப்பொன்றை நடத்தினர்.

அந்த சந்திப்பில் சிரேஷ்ட அமைசசர் பௌசி அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், றிசாட் பதியூதீன், ஏ.எல்.எம. அத்தாவுல்லா, பசீர் சேவுதாவூத், பிரதியமைச்சர்களான எம்.எல்.எம் ஹிஸ்புல்லா, பைசர் முஸ்தப்பா மற்றும் ஏ:ஆர்.எம்.அப்துல்காதர் ஆகியோரின் கையொப்பத்தில் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. (செ)


### வீடு வாடகைக்கு உண்டு

பலாலி வீதியில் கோண்டாவில் டிப்போவிற்கும் பெற்றோல் செற்றிற்கும் இடையில் சகல வசதிகளுடனும் கூடிய இரண்டு வீடுகள் வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு :
இல. 22, பெருமாள் கோவில், தெற்கு வீதி, யாழ்ப்பாணம்.
0776146253 (3592)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முதற் பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலில் யாழ் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டத்திலே வாழுகின்ற கணவனை இழந்த பெண்மணிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக அங்கஜன் இராமநாதனினால் நடைமுறைப்படுத்தவுள்ள வாழ்வாதார உதவித் திட்டத்தில் பயன் பெறும் பொருட்டும், தங்களது பிரச்சினைகளிற்கான தீர்வினை காணும் நோக்கத்துடனும் இல. 80A, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் பாதிப்புற்ற பெண்கள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**அங்கஜன் இராமநாதன்**
யாழ் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்
பிரதான அமைப்பாளர்

(C-4295)


### Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம் (C-4290)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062


## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் இராஜேஸ்வரி

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை கடற்கரை வீதி, கற்கோவளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் இராஜேஸ்வரி நேற்று (11.08.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - தங்கச்சியம்மாள் தம்பதியரின் அன்பு மகளும், பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் செல்வச்சந்திரன் (பிரான்ஸ்), பாலரஞ்சினி, ராஜநந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகவடிவேல் (இளைஞர் சேவை உத்தியோகத்தர் - கோப்பாய்), வள்ளியம்மை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், விதுஷன், விதுஷிகா, ஆதீஷ், ரித்தின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கடற்கரை வீதி, கற்கோவளம்,
பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்

(சி-4296)




வாழ்க்கையில் வசந்தம் உருவாக நல்லூர்க் கந்தனை வேண்டுகின்றோம்.

இலங்கையின் தலைசிறந்து விளங்கும் முன்னணியான நிறுவனம்

**World Express Services**

உலக நாடுகளுக்கான துரித பொதிகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப எங்களை நாடுங்கள்




தலைமை அலுவலகம்:
338, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு - 15
தொ. பே.: 0112520894

கிளை : 277, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ. பே. 021 222 0356
(Central Nursing Home முன்பாக)
e.mail : worldexpress.ser@gmail.com www.worldexpressservices.com

கிளை : 180/5 புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா.
தொ. பே. : 024 490 3200

(C-4280)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... அவர்களது அச்சகத்தில் 12.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org